உ

சிவமயம்

# சிவபூமி திருவாசக அரண்மனை

## நாவற்குழி, இலங்கை

## ஓராண்டு நிறைவு சிறப்பு மலர் - 2019





வெளியீடு

**சிவபூமி அறக்கட்டளை**

**இலங்கை.**



உ
சிவமயம்

# சிவபூமி திருவாசக அரண்மனை

## நாவற்குழி, இலங்கை

## ஓராண்டு நிறைவு சிறப்பு மலர்
## 2019



வெளியீடு

## சிவபூமி அறக்கட்டளை


| | |
|---|---|
| தலைமை அலுவலகம்<br>கோண்டாவில்<br>தொலைபேசி : 021 222 7938 | சிவபூமி திருவாசக அரண்மனை<br>ஏ9 வீதி, நாவற்குழி<br>தொலைபேசி : 021 221 4330 |

நூல் : சிவபூமி திருவாசக அரண்மனை
ஓராண்டு நிறைவு
சிறப்பு மலர் (2019)

வெளியீடு : சிவபூமி அறக்கட்டளை, இலங்கை

பதிப்பு : ஜூலை 2019

அச்சுப்பதிப்பு : சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை
கோண்டாவில்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் ல:.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாலொடும் பெருந்தகை யிருந்ததே!

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாவோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்குஆட் செய்யின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேல்ஆம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்பு உறநடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி!

# சிவபூமி அறக்கட்டளை தலைவரின் செய்தி



## என் இதயத்திலிருந்து....

தெய்வத் திருவருளால் தோற்றம் பெற்ற திருவாசக அரண்மனை தெய்வீக சக்தி நிறைந்த ஓர் உன்னத ஷேத்திரமாகும். கடந்த ஒரு வருட காலத்தில் பல ஆயிரம் மக்கள் திருவாசக அரண்மனையில் அமைந்துள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலுக்கு வருகை தந்துள்ளனர். ஆத்ம திருப்தியோடு தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கிறார்கள். பலர் எம்மை வாழ்த்துகிறார்கள். இது மனித கைங்கரியம் அல்ல, தெய்வ கைங்கரியம் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

திருவாசக அரண்மனைக்கு வருகைதரும் பக்தர்கள் இளைப்பாறிச் செல்வதற்காக அரண்மனையின் தென்திசை நிலம் வைத்திய நிபுணர் வ.மனோமோகன் தம்பதிகளின் காணிக்கையாக எமக்கு கிடைத்துள்ளது. அந்த நிலத்தை அவர்கள் கொள்வனவு செய்து சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கியிருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

சிவதெட்சணாமூர்த்தியின் திருவருளால் திருவாசக அரண்மனைக்கு முன்பாகவுள்ள நிலத்தில் எம் தமிழர் பண்பாட்டு மரபினை எடுத்துக் கூறும் சிவபூமி அரும்பொருட் காட்சியகம் உருவாகி வருகிறது. மூன்று மாடிகளைக் கொண்ட இந்த அரும்பொருள் ஆவணக் காப்பகம் இறையருளாலும் அன்பர்களது ஆசியாலும் விரைவில் பிரகாசிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கடவுள் காத்திரமான நல்ல கற்பனைக்கு நிச்சயம் உதவுவார் என்பதை சிறியேன் உணர்கிறேன். சிலவேளைகளில் கடவுளின் அருளை நினைந்து கண்ணீர் விடுவதும், கண்துயிலாது எழுந்திருப்பதும் சிறியேனுக்கு வழக்கமாகிவிட்டது. திருவாசக அரண்மனை அமைக்கப்பட்ட பின்பு, அற்ப மனிதனாகிய எனக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சாதனைத் தமிழன் விருது வழங்கிப் போற்றினார்கள். பொருள் தந்தவர் யாரோ; கைங்கரியங்களை நிறைவேற்றுவதற்கு காரணகர்த்தாவாக இருப்பது, எல்லாம் கடந்த இறையருள் என்பது எல்லோருக்கும் புரிவதில்லை.

என்னைப் படைத்த இறைவனுக்கு என்னைத் தெரியும். என் அறிவுக்கு எட்டியவரை எனக்கு என்னைத் தெரியும். எனக்கு கிடைத்த பாராட்டுக்கள் எனக்கு உரியவை அல்ல என்பதும் எனக்குத் தெரியும். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்னையும் ஆட்கொண்டருளி..." என மாணிக்கவாசகப் பெருமான் பாடிய வரிகள் சிற்றறிவுடைய சிறியேனுக்கும் பொருந்தும்.

அன்பர்களே, கருணையால் - திருவருளால் உருவான இத்திருவாசக அரண்மனை முதலான சிவபூமி அறப்பணிகளை சூரிய சந்திரர் உள்ளவரை நீங்களும் உங்கள் சந்ததியினரும் கட்டிக் காப்பீராக!

# சிவபூமி திருவாசக அரண்மனை – ஓர் அறிமுகம்

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் மற்றுமொரு செயற்பாடாக தோற்றம் பெற்றதுதான் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனை.

இன்று இலங்கையிலுள்ள பிரதான நெடுஞ்சாலைகளுள் ஒன்றாக இருபத்துநான்கு மணிநேரமும் வாகனப் போக்குவரத்துள்ள வகையில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் ஏ9 நெடுஞ்சாலை, வடபகுதியுடன் இலங்கையின் ஏனைய பகுதிகளை இணைப்பதாக சிறப்புப் பெறுகின்றது. இந்த ஏ9 பாதை ஊடாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் அனைவருக்கும் நுழைவாயிலாக நாவற்குழி அமைந்திருப்பது மற்றுமொரு சிறப்பாகும்.

இந்த நாவற்குழி கிராமத்தில் தோற்றம் பெற்றுள்ள திருவாசக அரண்மனையானது ஏ9 பிரதான நெடுஞ்சாலையில் நாவற்குழி முச்சந்தியிலிருந்து நாவற்குழி பாலம் நோக்கிச் செல்லும் பாதையில் (நாவற்குழி புகையிரத நிலையத்திலிருந்து ஐம்பது மீட்டர் தொலைவில்) அரச உணவுக் களஞ்சியத்துக்கு எதிராக பரந்த விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

இந்த திருவாசக அரண்மனை வளாகத்தில் சிவதெட்சணாமூர்த்திக்கு திருக்கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருப்பது இன்னொரு வரலாற்றுச் சிறப்பாகும். ஏனெனில் இலங்கையில் சகல ஆலயங்களிலும் சிவதெட்சணாமூர்த்தி பரிவாரத் தெய்வமாக தெற்கு நோக்கிய நிலையில் எழுந்தருளியிருப்பதையே காணமுடிகிறது. இந்தியாவில் சிவதெட்சணாமூர்த்திக்கு கோயில்கள் இருக்கின்றன. இலங்கையில் சிவதெட்சணா மூர்த்தியை மூலமூர்த்தியாகக் கொண்டு தனியானதொரு ஆலயம் நாவற்குழியில் மட்டுமே தோற்றம் பெற்றிருப்பது சிறப்பான விஷயமாகும்.

கடந்த வருடம் (2018) ஜூன் மாதம் 24ஆம் திகதியன்று மாலை திருவாசக அரண்மனையின் திறப்புவிழா இடம்பெற்றது. மறுநாள் 25ஆம் திகதியன்று சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த இரு நிகழ்வுகள் தொடர்பான தகவல் தொகுப்பும், திருவாசக அரண்மனை தோற்றம் பெற்ற வரலாறும் இந்த சிறப்பு மலரின் உள்ளே சொல்லப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருட காலத்தில் திருவாசக அரண்மனை வளாகத்தில் வளர்ச்சி நிலையில், ஒன்றன்பின் ஒன்றாக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். அகத்திய முனிவருக்கு பரிவாரக் கோயில் அமைக்கப்பட்டிருப்பதுடன், 2019 ஜூலை 7ஆம் திகதியன்று எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவமும், மறுநாள் 8ஆம் திகதியன்று கும்பாபிஷேகமும் நடந்தேறியுள்ளன. அகத்திய முனிவருக்கான பரிவாரக் கோயில் திருவாசக அரண்மனை முன்பகுதியின் இடது பக்க மூலையில் அமைந்துள்ளது. இந்தச் சிறுகோயில் முற்றுமுழுதாக கருங்கல்லினால் வடிவமைக்கப் பட்டிருப்பது சிறப்புக்குரியது.

திருவாசக அரண்மனையின் வலது பக்கத்தில் அன்னதான மண்டபமொன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அரண்மனை நுழை வாயிலின் உள்ளே வலது பக்கத்தில் புதிதாக மணிக்கோபுரமொன்று நிர்மாணிக்கப்பட்டு, நிறைவுபெறும் நிலைக்கு வந்துவிட்டது. விரைவில் மணி பொருத்தப்படவிருக்கிறது. இந்த மணிக்கோபுரமும் முற்றுமுழுதாக கருங் கல்லினால்தான் வடிவமைக்கப்பட்டிருப்பது இன்னொரு சிறப்புக்குரிய விஷயமாகும்.

சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில் பூசை, அபிஷேகக் கருமங்களை நிறைவேற்றும் வகையில், ஆலய பிரதம குருவாக சிவஸ்ரீ மனோகரக் குருக்கள் நிருபன் குருக்கள் அவர்கள் பணியாற்றி வருகிறார். சிறப்பு பூசை அபிஷேக வேளைகளில் வேறு சிவாச்சாரியார்களும் இங்கு வருகை தந்து, பிரதம குருக்கள் ஐயாவுக்கு

உதவியாக இணைந்து கொள்வது வழக்கமாகும். திருவாசக அரண்மனை வளாகத்தில் அலுவலகமும் பூசைப் பொருட்கள் விற்பனை நிலையமும் இயங்கிவருகிறது.

திருவாசக அரண்மனையின் இடது மற்றும் வலது பக்க சுவர்களில் கருங்கல்லில் பதிக்கப்பட்ட திருவாசகப் பாடல்கள் காட்சி தருவதற்கும் மேலாக இன்னொரு விடயத்தையும், அவதானிக்க முடிகிறது. அதாவது, திருவாசக அரண்னையின் வலதுபக்க சுவரில், திருவாசகப் பாடல்கள் நிறைவுபெற்ற பின், சுவரின் மிகுதிப் பகுதியில் (அதாவது வலது பக்க சுவரின் முன் பகுதியில்) பன்னிரண்டு மொழிகளில் எழுதப்பட்ட சிவபுராணப் பாடல்கள் பதிக்கப்பட்டிருப்பதை காணலாம். ஆங்கிலம், சிங்களம், யப்பான், பிரெஞ்சு, கன்னடம், ஜேர்மன், தெலுங்கு, இத்தாலி, பெங்காலி, அரபி, மலையாளம், சீயம் ஆகிய மொழிகளில் சிவபுராணம் காட்சி தருகிறது.

திருவாசக அரண்மனை வளாகத்தின் முன் பகுதியில் முற்றிலும் கருங்கல்லினால் வடிவமைக்கப்பட்ட 21அடி உயரமான இரதமொன்று காணப்படுவது இன்னொரு சிறப்பாகும். இந்த இரதத்தின் உள்ளே நாக பாம்பின் கீழ் வீற்றிருக்கும் சிவலிங்கமும், அருகே மாணிக்கவாசகப் பெருமானின் திருவுருவமும் காட்சி தருவதாக உள்ளது. இந்த இரதமும் நான்கு சக்கரங்களுடன் நீர்நிலையொன்றுக்குள் நிற்பது போல அமைக்கப்பட்டிருக்கிறது.

சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலை சுற்றியவாறு மூன்று பக்கங்களிலும் இரண்டரை அடி உயரமான முற்றிலும் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்ட 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதும் அடியார்களுக்கு இறையுணர்வை ஏற்படுத்துவதாகவே அமைந்து உள்ளது. அடியார்கள் தங்கள் கைகளால் சிவலிங்கத்திற்கு நீர் அபிஷேகம் செய்து கொள்வதற்கு இங்கு ஏற்படுத்தியிருக்கும் வசதியானது, மேலான திருவருட் சிறப்பாகவே அடியார்களால் போற்றப்படுகிறது.

**– அ.கனகசூரியர்**

* * *

## மாணிக்கவாசகரின் சிறப்பு

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகருக்குத்தான் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. திருத்தேரிலும் மாணிக்கவாசகரே திருவுலா வருகிறார். அடியவருக்குப் பிரமோற்சவமும், திருத்தேருலாவும் நிகழும் சிறப்பு வேறு எத்தலத்திலும் காண இயலாதது. மணிவாசகருக்கே அமைந்தது இத்தனிச் சிறப்பு.

இடைப்பட்ட காலத்தில், முருகனுக்கு ஒருவர் கோயில் எடுப்பித்துத் திருக்குடமுழுக்குச் செய்யும் காலத்தில், அங்கு மணிவாசகரையே பிரதிட்டை செய்ய வேண்டும் என்ற அசரீரி தோன்ற, அவ்வண்ணமே மணிவாசகரையே எழுந்தருள்வித்துள்ளனர். இம்மூர்த்தியை ஆனந்த மாணிக்கவாசகர் எனக் குறிக்கின்றனர். எல்லாச் சிறப்புக்களும் திருவருட் குறிப்பின் வழி இங்கு மணிவாசகருக்கே நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

ஆவுடையார் உள்ள மூலத்தானம் மட்டுமே மாணிக்கவாசகரின் திருப்பணி என்றும், அம்மையார் கோயில் இராமநாதபுரம் இராஜா திருப்பணி என்றும் கொடுங்கைச் சிறப்பும் மற்றையோர் திருப்பணியே என்றும் குறிப்பிடுகின்றனர்.

திருப்பெருந்துறையில்தான் குருந்த மரத்தடியில் இறைவன் குருமூர்த்தியாய் எழுந்தருளிக் குதிரை கொள்ள வந்த மணிவாசகரை ஆட்கொண்டு அருளுபதேசம் செய்தார். மணிவாசகர் குறிப்பிடும் தீர்த்தமாம் பொய்கை, கோயிலின் தென் பிரகாரத்தில் உள்ளது. குருந்த மரமும் உபதேசக் காட்சியும் உட்கோயில் மேற்குப் பிரகாரத்தில் சிலை வடிவில் அருந்திருமேனியாகக் காட்சி தருகிறது.

**[நன்றி: திருவாசகம் –ஞானசம்பந்தம் பதிப்பகம்]**

# சிவபூமி திருவாசக அரண்மனை தோற்றம் பெற்ற வரலாறு

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

சிறுபராயம் முதல் திருவாசகத்தில் என்னை அறியாத பற்று இருந்தது. யான் ஆரம்பக்கல்வி கற்ற சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் தினமும் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தின்போது திருவாசகத்தில் ஒரு பகுதியைப் பாடுவார்கள். அந்த திருவாசகப் பாடல்கள் முதலாம் வகுப்பிலேயே எனக்கு மனனமானது. திருவாசகத்தின் போற்றித் திருஅகவல் பகுதியில் வரும் "நான்முகன் முதலா வானவர் தொழுது எழ" என ஆரம்பமாகும் அந்தப் பாடலின் நிறைவில் வரும் "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற அடிகளோடு பிரார்த்தனை நிறைவுபெறும். பின்னாளில் திருவாசக சொற்பொழிவுகள் பலவற்றை கேட்கும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது. பின்னர் திருவாசகப் பாடல் அடிகளை வைத்து உரையாற்றும் சந்தர்ப்பமும் சிறியேனுக்கு கிடைத்தது.

2016 ஆம் ஆண்டு திருவண்ணாமலை வீதியில் நடந்த திருமுறை மாநாட்டுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. ஓதுவார் சங்கம் ஒழுங்கு செய்த இம்மாநாட்டில் இரண்டு நாட்கள் உரையாற்றினேன். நிறைந்த அறிஞர் பெருமக்கள் கூட்டம். நிறைவுநாளன்று திருமந்திரம் பற்றியும் திருவாசகம் பற்றியும் ஒருமணிநேரம் உரையாற்றினேன். அந்த உரை முடிந்து இரவு உணவுக்காக மண்டபத்தின் கீழ்ப் பகுதிக்குச் செல்லும் போது படியிலிருந்த ஒரு முதியவர் அருகே அழைத்தார். கந்தலான ஆடையோடு இருந்த அவர் திருமந்திரம், திருவாசகம் நூல்கள் பற்றி என்னுடன் பேசினார். மேடையில் அறிஞர்கள் பேசியதை விட ஆழ்ந்த அறிவோடு அவர் உரையாடினார். "நீங்கள் யார்?" என்று கேட்டேன். 'அண்ணாமலையானை அடிபற்றி வாழும் போக்கற்றவன்' என்றார். அவரது உரையாடல் தொடர்ந்தது. "ஈழநாட்டில் திருவாசகம் நன்றாகக் காப்பாற்றப்படுகிறது என அறிந்தேன். அருமருந்தான திருவாசகத்தை அனைவரும் நன்றாகப் பருகவேண்டும். திருவாசகம் பிறந்த தென்னாட்டை விட, உங்கள் நாட்டில் அது பெரிதும் நேசிக்கப்படுகிறது" என பாராட்டினார்.

இவர் ஒரு மகான் என்பதை உணர்ந்து கொண்டேன். பற்றற்ற நிலையில் அண்ணாமலையில் இருப்பதை அவரது வார்த்தைகள் எடுத்துக் காட்டின. காலை கிரிவலத்தின் போது காவி உடை தரித்து, ஆங்காங்கே அமைதியாக இருந்தவர்களை சந்தித்தேன். சித்தர்கள், யோகிகள், மகான்கள், திருவண்ணாமலை வீதி எங்கும் நடமாடி வந்தார்கள் என்பது உண்மை. இப் பெரியார் திருவாசகத்தை அழியாது காக்க வேண்டும் என்றார். திருவாசகப் பாடல்களை நூல்வடிவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர் சிரித்துவிட்டு, "இயற்கையாலும் போராலும் என்றும் அழியாது திருவாசகம் காப்பாற்றப்பட வேண்டும்" என்றார். விளங்கவில்லை என்றேன். "உளிகொண்டு கல்லில் செதுக்கிக் காப்பாற்ற வேண்டும்" என்றார். எங்கள் ஊரில் கருங்கல்லே இல்லை என்றேன். "முயற்சித்தால் முடியாதது எது? என்று கேட்டார். சிரித்துவிட்டு, சாப்பாடு முடியப் போகிறது நான் போய் வருகிறேன் என்று சொல்லிட்டு புறப்பட்டுவிட்டேன்.

அறையில் தங்கியிருந்த எனக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை. மறுநாள் சிதம்பரம் புறப்பட்டுவிட்டேன். எனது பயண ஒழுங்குகளையும் விழா அமைப்பு ஏற்பாடுகளையும் செய்தவர் லண்டனில் வாழும் உறவினர் கு.மனோகரன், இவர் ஒரு தொழில் அதிபர். திருவண்ணாமலைக்கு வந்திருந்த

இவரிடமிருந்து விடைபெற்று சிதம்பரம் வந்து. மறுநாள் ஊர் வந்து சேர்ந்தேன்.

திருவாசகத்தை கருங்கல்லில் பொறித்து காப்பாற்ற வேண்டும் என்ற கூற்றை சிலருக்கு சொல்லிப் பார்த்தேன். ஒரு சிலர் ஏசினார்கள். உங்களுக்கு வேலை இல்லை என்றனர். இலத்திரனியல் கருவிகளில் திருவாசகம் முழுவதையும் பார்க்கலாம். பின் ஏன் அதற்கு தனிக் கட்டடம், கருங்கல் பதிப்பு? என்று இன்னுமொரு சிலர் அறிவுக்கு எட்டியவற்றை யெல்லாம் சொன்னார்கள். இரு மாதங்களின் பின் மீண்டும் ஒரு சொற்பொழிவுக்காக இந்தியா சென்றேன். சில கோயில்களில் திருமுறைகளை கருங்கல்லில் பதிப்பித்திருந்த காட்சி உள்ளத்தை உருக்கியது. இதே சிந்தனையில் ஊர் திரும்பினேன்.

"நாவற்குழி கிராமத்தில் ஏ9 பிரதான வீதியில் எனக்கொரு காணி இருக்கிறது. அக்காணியை சிவபூமி அறக்கட்டளைக்கு தருவதற்கு விரும்புகிறேன்" என அவுஸ்திரேலியாவில் வாழும் இதய வைத்திய நிபுணர் மனோமோகன் அவர்கள் 2016 ஏப்ரல் மாதம் எனக்குச் சொன்ன விடயம் அகத்தில் நிறைந்திருந்தது. ஆனால் அந்த நிலம் எங்குள்ளது என்று எனக்குத் தெரியாது. என்ன ஆச்சரியம்? அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராகவிருந்த கந்தையா நீலகண்டன் அவர்கள் அவுஸ்திரேலியா சென்று வரும்போது அவரிடம் வைத்திய நிபுணர் மனோமோகன் காணி உறுதி முதலான சகல பத்திரங்களையும் கொடுத்து அனுப்பியிருந்தார். நீலகண்டன் ஐயா அந்த விடயத்தை தொலைபேசி ஊடாக எனக்கு அறிவித்திருந்தார். இரு வாரங்களில் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் அந்தக் காணிக்குரிய உறுதி எழுதி பதிவுசெய்து, யாழ்ப்பாணத்தில் நடந்த விழாவொன்றுக்கு வரும்போது அதனைக் கொண்டுவந்து என்னிடம் ஒப்படைத்தார். உறுதியோடு காணியை கண்டு பிடித்தேன். அந்தக் காணிக்குள் காலடி எடுத்து வைத்தவுடன் ஏதோவொரு ஆத்மார்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

அந்தக் காணியில் திருவாசக அரண்மனை கட்டி, அரண்மனைச் சுவரில் திருவாசகம் முழுவதையும் கருங்கல்லில் பதித்து காட்சிப்படுத்த வேண்டும் என்ற ஆவல் அப்போது ஏற்பட்டது. கையில் பணம் இல்லை. ஆனால், கற்பனையோ என்னை மீறியது. தூக்கம் இன்றி மனத்தை வாட்டியது. பூசலார் நாயனார் மனதில் கோயில் கட்டியது போல் யானும் திருவாசக அரண்மனையை மனதில் கட்டிக் கொண்டிருந்தேன். எதற்கும் ஒரு வரைபடத்தை உருவாக்குவோம் என்ற எண்ணம் கொண்டு சாரங்கன் என்ற தம்பி ஒருவர் மூலம் கட்டடத்திற்குரிய வரைபடத்தை தயாரித்துப் பெற்றுக்கொண்டேன். கையில் பணம் இல்லாத காரணத்தினால் வரைபடத்தை சுருட்டி வைத்துவிட்டு, 2017 ஏப்ரல் மாதத்தில் அவுஸ்திரேலியா சென்றேன்.

நாவற்குழியில் காணியை அன்பளிப்பாக வழங்கிய இதய வைத்திய நிபுணர் மனோ மோகன் தம்பதியினர், நான் அவுஸ்திரேலியா சென்ற வேளையில் இரவு விருந்துபசாரத்திற்கு என்னை அழைத்தார்கள். சிட்னி மாநகரில் உள்ள சரவணபவன் சைவ உணவகத்தில் உணவு அருந்திய பின் யான் கையில் கொண்டு சென்ற வரைபடத்தையும், கட்டடத்திற்கான உத்தேச செலவு மதிப்பீட்டுத் தொகையையும் வைத்திய நிபுணர் ஐயாவிடம் கொடுத்தேன். அவரும் பாரியாரும் அதனை இன்முகத்துடன் படித்துப் பார்த்தனர். என்ன ஆச்சரியம்? "கட்டடத்திற்குரிய முழுச்செலவையும் நாங்களே தருகிறோம். உங்கள் ஆசையை நிறைவேற்றுங்கள்" என்றனர். ஆனந்தம்! ஆனந்தம்!! பேரானந்தம்!!! எல்லையில்லாத பெருமகிழ்ச்சியால் அன்றிரவு எனக்கு நித்திரையே வரவில்லை. என்னை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து அறிமுகம் செய்து வைத்தவர் வை.ஈழலிங்கம் அவர்கள். திரு.ஈழலிங்கம் அவர்களும் அவரது பாரியாரும் வைத்திய நிபுணர் மனோமோகன் வழங்கிய விருந்துபசாரத்தில் பங்குபற்றியவர்கள். அவர்களும் பெருமகிழ்ச்சி கொண்டதுடன், வைத்திய நிபுணரின் பெருந் தன்மையை மெச்சினார்கள்.

நாடு திரும்பியதும் நாவற்குழியில் அதற்கான பணியை தொடக்கி வைப்பதில் பெரிதும் கவனமெடுத்தேன். இரவு பகலாக கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வந்தன.

திருவாசகப் பாடல்களை கருங்கல்லில் கையால் உளி கொண்டு பதிப்பிப்பதற்கு பலரை நாடியும் பலன் கிடைக்க வில்லை. ஒருவரிடம் ஒரு பாடலை எழுதிக் கொடுத்தேன். நான்கு பிழைகளுடன் கல்லைக் கொண்டுவந்து தந்தார். அவருக்குரிய பணத்தைக் கொடுத்து, அவர் பணியை முடிவுக்குக் கொண்டுவந்தேன். வேறு ஒருவர் கருங்கல்லில் நான்கு வரிப் பாடலை கணினி உதவியோடு பதிப்பித்துக் கொண்டுவந்தார். கல்லில் எழுத்து ஆழமாகப் பதியவில்லை என்பதால் அவரையும் கைவிட்டேன். சோதனைக்கு மேல் சோதனை. இனி கடவுள்தான் எழுத வேண்டும் என சொல்லிவிட்டு இருந்தேன்.

எதிர்பாராதவிதமாக, கிளிநொச்சி விவேகானந்தர்நகர் மேற்கில் வசிக்கும் வினோத் என்பவர் கருங்கல்லில் எழுத்து வெட்டுவதாக அறிந்து அவரை அழைத்தேன். வழமைபோல அவரிடமும் பரிசோதனை. ஒரு கல்லில் நான்கு வரிப் பாடலை வெட்டிவரும்படி கேட்டுக் கொண்டேன். ஒருநாளில் கொண்டு வந்து தந்தார். எல்லையில்லாத மகிழ்ச்சி. வயதில் குறைந்தவர் அவர். திருவாசகம் எனக்குத் தெரியாது என சிரித்துக் கொண்டே சொன்னார். எழுத்துப் பிழையைப் பார்ப்பதற்கு ஒருவரை ஏற்பாடு செய்கிறேன். இரவு பகலாக கருங்கல்லில் பதிக்க வேண்டும் என கட்டளையிட்டேன். நாவற்குழி வளவிலேயே கருங்கல்லில் திருவாசகம் முழுவதையும் பதிக்கும் பணி ஆரம்பமானது. அச்சுப் பிழை இல்லாத நூல்கள் இரண்டை அடிப்படையாகக் கொண்டு, எழுத்துப் பிழை இல்லாமல் இப்பணி நடைபெறுவதற்கு மேற்பார்வை செய்யுமாறு ஊரெழு கனகசூரியர் அவர்களை அன்புடன் வேண்டினேன். அவரும் அக்கடமையை சிறப்பாகச் செய்தார்.

நள்ளிரவு 12.00 மணிக்கு மேலாகவும் கருங்கல்லில் திருவாசகம் பதிக்கும் வேலைகள் நடைபெறும். என்ன ஆச்சரியம்? கருங்கல்லில் 658 திருவாசகப் பாடல்களையும் பதிக்கும் பணி ஒருசில மாதங்களில் நிறைவுபெற்றன. சுமார் 22 இளைஞர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். தரமான கருங்கல்லில் நேர்த்தியான வகையில் இப்பணி இடம்பெற்றது. அந்த அரிய காட்சி இன்றும் மனதில் பசுமையாக நிறைந்துள்ளது.

கருங்கல்லில் திருவாசகப் பாடல்களை பதிப்பித்தல் வேலைக்கு கையில் பணம் இல்லை. அவ்வேளையில் லண்டனில் நடைபெற்ற சைவமுன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளும்படி அங்கு கணக்காளராகக் கடமையாற்றும் அன்புக்குரிய திரு.சு.பாலசிங்கம் அவர்கள் தனது சொந்தப் பணத்தில் என்னை அழைத்திருந்தார். தனது வீட்டிலேயே தங்கவைத்து, நிகழ்ச்சிகளுக்கும் அழைத்துச் சென்றார். சுமார் 18 இலட்சம் ரூபாவரை தனது அன்பளிப்பாக வழங்கினார். அங்கு கிடைத்த அன்பளிப்புக்களை திருவாசகப் பாடல் பதிப்பித்தலுக்கு பயன்படுத்தினேன். என்ன ஆச்சரியம்? உரும்பிராயைச் சேர்ந்த செல்வி செல்வநாயகம் என்ற ஆசிரியை அவர்களும் ஒருதொகைப் பணம் தந்தார். இறையருளால் கருங்கல்லில் திருவாசகம் பதிக்கும் பணி வெற்றிகரமாக முற்றுப்பெற்றது.

2017ஆம் ஆண்டு திருச்செந்தூரில் நடைபெற்ற கந்தசஷ்டி விழாவின் போது ஆறு நாட்களும், லண்டன் சிவானந்தசோதி அவர்களின் அழைப்பின் பேரில் உரையாற்றச் சென்றிருந்தேன். உரை முடிந்து, கொழும்பு வந்து தங்கியிருந்த வேளையில், திருவாசக அரண்மனையின் மத்தியில் தெட்சணாமூர்த்தி கோயிலொன்று கட்டினால் என்ன என என் மனதில் எண்ணமொன்று உருவானது. அப்போது நேரம் அதிகாலை நான்கு மணி. என் மனச் சிந்தனையை சிற்பக் கலைஞர் புருஷோத்தமன் அவர்களுக்கு தொலைபேசி ஊடாகச் சொன்னேன். "அதற்கென்ன ஐயா" என்று ஆவலுடன் பதிலளித்தார் அவர். யாழ்ப்பாணம் வந்ததும் தெட்சணாமூர்த்தி கோயிலுக்கு அத்திபாரம் இடப்பட்டது. என்ன ஆச்சரியம்? கோண்டாவில் ஐயப்பன் ஆலய குருக்களின் அழைப்பின் பேரில் இந்திய சிற்பக் கலைஞர்கள் சிலர் விக்கிரகங்கள் செய்வதற்காக இங்கு வந்து, ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில் தங்கியிருப்பதாக அறிந்தேன். அந்த இடத்திற்கு திரு.புருஷோத்தமன் என்னை அழைத்துச் சென்றார். பத்து இலட்சம் ரூபாவை முற்பணமாகக் கொடுத்து, 4 $^1/_2$ அடி உயரமான தெட்சணாமூர்த்தி விக்கிரகத்தை செய்யும்படி வேண்டினோம். இரு மாதங்களில் விக்கிரக வேலைகள் நிறைவு பெற்றதும், திரு.

புருஷோத்தமன் விக்கிரகத்தை தனது வாகனத்தில் கோண்டாவில் சிவபூமி பாடசாலைக்கு கொண்டு வந்து தந்தார். தண்ணீருக்குள் தெட்சணா மூர்த்தியை வைத்து தினமும் நீரால் அபிஷேகம் செய்துவந்தோம்.

இந்தியாவில் வள்ளுவர் கோட்டத்தில் கருங்கல் இரதமொன்றைக் கண்டபோது, யாழ்ப்பாணத்தில் அதுபோன்ற இரதமொன்று இல்லையே என கவலைப்பட்டேன். திரு. புருஷோத்தமன் அவர்களுக்கு அதுபற்றி சொன்னேன். "கவலையை விடுங்கள், எனது சிற்பிகள் ஊடாக கருங்கல் இரதமொன்றை வாசலில் உருவாக்கித் தருகிறேன்" என்றார். நாவலப்பிட்டியிலிருந்து கருங்கற்களை கனரக வாகனத்தில் கொண்டுவந்து இறக்கினார். அப்போது என்னிடம் எதுவித பணமும் இருக்கவில்லை. மனம் மட்டுமே ஆவலாக இருந்தது. வேலை தொடங்கப் பெற்றது. கருங்கல் இரதத்தின் அடிப்பகுதி உருவாக்கப்பட்டுவிட்டது. மேற்பகுதி செய்வதற்கு நிதி இல்லை. பெரும் கவலை! தற்செயலாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கயிலாசபிள்ளை ஐயா அவர்களின் ஒருவருட நினைவுப் பூர்த்தியை கீரிமலை கடற்கரையில் நிறைவேற்றுவதற்காக திருமதி கயிலாசபிள்ளை அவர்களும், மகன் அரவிந்தன் அவர்களும் வந்திருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் போது நாவற்குழியில் அமைக்கப்பட்டு வரும் திருவாசக அரண்மனை கட்டட வேலைகளை பார்த்துவிட்டு செல்லுங்கள் என அவர்களிடம் சொன்னேன். மறுநாள் யான் நாவற்குழியில் நிற்கும் போது எதிர்பாராதவிதமாக, ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளுடன், திருமதி கயிலாசபிள்ளை அம்மாவும், மகன் அரவிந்தன் அவர்களும் அங்கு வந்தார்கள். திருவாசக அரண்மனை திருப்பணியைக் கண்டு மெச்சினார்கள். இந்த கருங்கல் இரதத்தின் மேல் பகுதியை நிறைவுசெய்வதற்கு நிதியின்றி தவிக்கிறேன் என்றேன். திரு அரவிந்தன் அவர்கள் "கவலைப்படாதீர்கள், இரதத்தை நிறைவுசெய்யும் செலவை நாங்கள் தருகின்றோம். முழுமையாக கருங்கல்லிலேயே இரதத்தை முடியுங்கள்" என்றார். இப்போது 21 அடி உயரமான கருங்கல் இரதம் நாவற்குழியில் காட்சியளிப்பதன் மூலம், இலங்கையில் முதன்முதலாக இங்குதான் அமைக்கப் பெற்றுள்ள பெருமையைப் பெறுகிறது.

திருவாசக அரண்மனை கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பலர் வந்து பார்த்துவிட்டுச் செல்வார்கள். நல்லூர் கந்தசுவாமி கோயில் இளைய எஜமானர் குகஶ்ரீ சயந்தன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் எனது அழைப்பை ஏற்று வருகைதந்து பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். கம்பவாதிரி ஜெயராஜ் அண்ணன் அவர்களும் வந்து பார்வையிட்டு பாராட்டினர். திருவாசக அரண்மனை அமைந்த மண்டப உட்பகுதியைச் சுற்றி நூற்றெட்டு சிவலிங்கம் அமைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் எனவும் ஆலோசனை வழங்கினார். இதற்கு, இனி எங்கே யாசகம் செய்வது என்று அவரிடம் கேட்டேன். இவ்வளவு காரியமும் செய்யும் உமக்கு இது ஏன் முடியாது? என சற்று கோபமாகவே சொன்னார்.

திருவாசக அரண்மனை உட்பகுதியில் சிவலிங்கம் வைப்பது சம்பந்தமாக சிந்தித்துக் கொண்டிருந்ததால் சில இரவுகள் நித்திரையின்றி தவித்தேன். சிற்பக் கலைஞர்கள் பலரிடம் இரண்டரை அடி உயரமான சிவலிங்கம் செய்வதற்கு எவ்வளவு செலவாகும் எனக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். மனம் ஓயவில்லை. கருங்கல்லில் திருவாசகத்தை பதித்த வேலையைச் செய்த வினோத் என்ற அந்த இளைஞர் யான் சொன்ன அளவில் சிவலிங்கமொன்றை வடிவமைத்துக் கொண்டு வந்து காட்டினார். ஆனால், அவர் சொன்ன செலவுக்கு யான் எங்கே போவேன்? துர்க்கை அம்பாளை மன்றாடினேன். தெல்லிநகர் துர்க்கை அம்பாளிடம் தினமும் யான் முறையீடுகளை முன்வைத்து வேண்டுதல் செய்வேன். அம்பாள் எனக்கு ஆறுதல் தருவாள். இந்த நிலையில் முதலாவது சிவலிங்கத்திற்கு எனது சொந்தப் பணத்தைக் கொடுத்தேன். இனி என்ன செய்வது என்று காத்திருந்தேன்.

கிளிநொச்சி, விவேகானந்தர் நகரிலுள்ள சிற்பக் கலைஞர்கள் பத்துப் பத்து சிவலிங்கமாக வடிவமைத்து, வாகனத்தில் கொண்டுவந்து இறக்கினார்கள். சோதனைக்கு மேல் சோதனை. அன்பர்கள் சிலர் உதவினார்கள். இவ்வருடம் (2018) ஏப்ரல் மாதத்தில் மீண்டும்

அவுஸ்திரேலியாவுக்கு சென்றேன். அங்கு உரையாற்றும்போது அன்பர்கள் தரும் அன்பளிப்புக்களை இம்முறை திருவாசக அரண்மனை பணிக்கு என முடிவாக்கினேன். அவுஸ்திரேலியாவில் வாழும் உடன்பிறவா சகோதரி திருமதி லயஸ்ரீ செல்வன் ஆறு சிவலிங்கம் வடிவமைப்பதற்குரிய நிதியை பெற்றுத்தந்தார். மேலும் சில அன்பர்கள் உதவி செய்தார்கள். கனவு நனவாகியது.

அவுஸ்திரேலியாவிலுள்ள இதய வைத்திய நிபுணர் மனோமோகன் அவர்களும், பாரியார் சிவகௌரி அவர்களும் வழமைபோல என்னை விருந்துபசாரத்திற்கு அழைத்தார்கள். "உங்கள் நிலை கண்டு கவலைப்படுகின்றோம் நீங்கள் கவலையை விடுங்கள். திருவாசக அரண்மனையின் மேலதிக வேலைகளுக்கும் சுற்றுப்புற மதில் வேலைகள் மற்றும் தேவைகளுக்கும் நாம் மேலும் உதவக் காத்திருக்கிறோம். நாம் உங்களை கைவிட மாட்டோம்." என்று உறுதியளித்தனர். கடவுள் மனித வடிவத்தில் வந்தது போல் இத்தம்பதிகளை யான் உணர்கிறேன். பண்பும், பணிவும், பக்குவமான வார்த்தைகளும் தம்பதிகளிடம் இருப்பது கண்டு வியக்கிறேன். என் வாழ்நாளில் கடவுள் எனக்குத் தந்த மிகச் சிறந்த உறவுகளுள் ஒன்றாக இவர்களைப் போற்றுகிறேன். இவர்களைப் பற்றி இன்னும் எழுதவேண்டும் என்பது என் விருப்பம். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விளக்கமாக எழுதுவேன்.

கட்டட நிர்மாணப் பணியில் எனக்கு பெரிதும் துணையாக நின்றவர் ஊரெழு க.சண்முகநாதன் அவர்கள். சிவபூமி அறக்கட்டளையின் கட்டட நிர்மாண வேலைகளை அக்கறையோடு மேற்கொண்டு நிறைவேற்றி வருபவர் அவர். திருவாசக அரண்மனை அழகாக அமைவதற்கு திரு.சண்முகநாதன் அவர்களும், அவரது பணியாளர்களும் பெரிதும் துணை செய்தனர். தென்னிந்தியா சிதம்பரம், பெரிய குத்தவக்கரையைச் சேர்ந்த சிற்பக்கலாவித்தகர் கலியப்பெருமாள் புருஷோத்தமன் அவர்களின் பெருந் தொண்டினை வர்ணிக்க முடியாது. என் சொல்லுக்கு உயர் மதிப்புக் கொடுக்கும் சிற்பக் கலைஞர். அவரது குழுவினரின் கைவண்ணம் கலைவண்ணமாகக் காட்சியளிக்கிறது.

சிவபூமி அறக்கட்டளை நிர்வாகத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் என் சிந்தனைகளுக்கு பெருந்துணை செய்பவர்கள். சிவபூமியில் பணியாற்றும் திரு.க.நவநீதன், திரு.பொ.சதீஸ் ஆகிய இருவரும் அலுவலகக் கடமைகளை உரிய முறையில் ஆற்றிவருகிறார்கள். திருவாசக அரண்மனை தொடர்பான செயற்பாடுகளுக்கு இவர்கள் இருவரினதும் பங்களிப்பையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மண்ணில் யாழ். நுழைவாயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையை எதிர்காலச் சந்ததியினர் கண்ணை இமை காப்பது போல பாதுகாத்துப் போற்ற வேண்டும் என்பது என் விருப்பம். இப்பெரும் பணியானது என் சித்தத்தில் திருவண்ணாமலை வீதியில் உதயமானது. நாவற்குழி வீதியில் உருவம் பெற்றுள்ளது. நினைத்துப் பார்க்க முடியவில்லை. இத்திருவருளை சொல்லிலோ எழுத்திலோ வடிக்க முடியாது. ஆச்சரியமாக இருக்கிறது. திருவாசக அரண்மனையை நேரில் தரிசிப்பவர்கள் உண்மையை உணர்வார்கள். இப்பெரும் பணியானது பெயருக்கோ புகழுக்கோ செய்யப்படவில்லை. எம் மண்ணில் சைவம் நிலைப்பதற்கு - அருமருந்தான திருவாசகம் நிலைப்பதற்கு அயராது பாடுபட்டு அமைக்கப்பட்டுள்ளது இந்த திருவாசக அரண்மனை. காலம் கடந்து எம்மண்ணில் திருவாசகம் நிலைக்கும் என்பது நம்பிக்கை.

***

# THE HISTORY OF THE ORIGIN OF SIVAPOOMI ARANMANAI

**By Orater Dr. Aru Thirumurugan**

From my childhood days I had an inclination unknown to my inner self towards Thiruvasagam. Verses from Thiruvasagam were sung daily in the mornings during Assembly at Ramanathan College Chunnagam where I had my Primary Education. These verses were registered in my memory when I was in standard one itself. The Recital commences with "Naan Mugan Muthala Vaanavar Thozuth Ela" which is under the Thiruvagal section praising Thiruvaasagam and the prayers will end with "Thennaadudaya Sivane Potri Ennaatavarukkum iraiva Potri" which is the end of this verse. In the later days I was fortunate to listen to various speeches about Thiruvasagam.Later I had the opportunity of delivering Speeches based on the Stanzas of Thiruvasagam.

In the year 2016 I got an opportunity to participate in the Thirumurai Mahanadu (Conference) held at Thiruvannamalai Street. I delivered a speech at this conference on two days. A full gathering of Scholars participated at this conference. On the day of conclusion I spoke for about an hour about Thirumanthiram and Thiruvasagam. After concluding my speech and when I was going downstairs an elderly person who was standing on the steps called me. This Person who was clad in rags spoke to me about the Books written about Thiruvasagam. He spoke to me with a sense of deep knowledge which was more in substance than those speeches delivered on the stage. I asked him "who are you?' He said he was a wanderer who lives by gracing the foot of Annaamalayaan. The conversation continued, he mentioned I have heard that Thiruvasgam is safeguarded well at Eela Nadu. All should embarace Thiruvasagam praising it as a rare Medicine. He praised that Thiruvasagam is highly cherished and loved in your country more than at Thennadu from where it originated.

I felt that he is a noble person. His words projected to me that he has renounced the world .During the morning kirivalam I met many who were clad in yellow Saffron who looked calm and silence here and there. It is true that Siththars, Yogis and noble men lined the streets of Thiruvannaamalai. This elderly person mentioned to me that Thiruvasagam should be safeguarded from extinct. I mentioned that Thiruvasagam is available in Print format.He smiled and mentioned "it should be safeguarded ever from natural calamities and war." "I replied that I didn't understand." "It should be conserved by chiseling on Granite Stone" I said in our region we do not find Granite stone. He replied 'Nothing is impossible if you try". I said I have to hurry up before the food is over and left.

I couldn't sleep that night. The following day I left for Chidambaram. All arrangements for my trip and the organisation of the function had been undertaken by my relative who is an industrialist and who resides in London. I said good bye to him who had come to Thiruvannamalai. I arrived

at Chidambaram and returned home the following day.

I mentioned the idea of engraving the versus of Thiruvasagam on Granite Stone to a few. Some casted remarks against my idea. Some said "Don't you have any other work? Some advised me Thiruvasagam could be read from Electronic Equipment, So what is the necessity to engrave on Granite Stone? They asked me. I went to India again after two months to deliver a Speech. The scene of the engraftment of Thirumuraigal melt my heart. I returned home with this thought in mind.

A cardiologist domiciled in Australia Dr.Manomohan mentioned to me in April 2016 "I have a piece of land at Navatkuli bordering the A9 Road, and I wish to donate it to the Sivapoomi Trust". This had occupied my mind. But I was not aware where this land is located. But what a surprise. When Kandiah Neelakandan who was the former chairman of the Hindu Maha Manram returned from Australia this Doctor had handed over all the relevant Documents to Mr.Neelakandan, Mr.Neelakandan informed me over telephone about this. Within two weeks the Deed was transferred in the name of Sivapoomi Trust, and was handed over to me when Mr.Neelakandan visited Jaffna to participate in a function. With the help of the Deed I located this land. When I stepped onto this land I had a glorious feeling in my mind.

An enthusiasm arose in my mind that an Aranmanai of Thiruvaasagam should be built on this land and engrave the verses of Thiruvaasagam on Granite Stone slabs and should be exhibited by paving on the walls of this Aranmanai. I had no money with me, but my imagination was boundless, my mind was restless and without sleep. Like Poosalaar Nayananaar who built a Temple in his imagination, I too was building the Aranmanai of Thiruvasagam in my imagination. Let me prepare the Drawing in any case, this thought came to my mind I got the Drawing done by a youngster named Saarangan. Since there was no money with me I rolled up the Drawing and left for Australia in April 2015.

Dr.Manomohan and Mrs. Manomohan had invited me for dinner. After having dinner at the Saravanabavan Vegetarian Restaurant at Sydney I handed over a Copy of the Drawing and the tentative estimate to Dr.Manomohan.He and his wife read those Documents with a smiling face. What a surprise! They said we will provide the necessary Funds "You can fulfill your desire". What a Joy what a delight! Due to the boundless Joy I couldn't sleep that night. It was Mr.Eelalingam who invited me to Australia and introduced me to Dr.Manomohan. Mr Eelalingam and his wife too were present at the Dinner hosted by Dr.Manomohan. They too were overjoyed and praised them for their warm heartedness.

After returning home I took lot of pains in commencing the construction work at Naavatkuly. Construction works were going on day and night. Though I approached many a person for the engraftment of the versus of Thiruvaasagam, but of no use. I handed over to a person a Verse to be engraved, he brought with him the engraved stone with four mistakes. I paid him for this and terminated. Another person had brought in a stone engraved with a Stanza of four lines which had been engraved with an aid of a Computer. The Alphabets had not been engraved deeply. So I terminated him too.

Unexpectedly I came to know that a person called Vinoth a resident of

Vivekanandar Nagar West Killinochchi undertakes engraftment on Stones and called him and as usual wanted to test him. I entrusted with him the usual Test of engraving a four line Stanza. He brought it in one day. I was overjoyed. He mentioned to me he does not know Thiruvaasagam. I told him I will entrust a person to correct the mistakes, and ordered that the work must go on day and night. The work of engraving the verses of Thiruvaasagam commenced in the Naavatkuli premises based on two Books devoid of any printing mistakes, I entrusted to Urelu Kanagasooriyar to supervise and ensure that the work proceeds without any spelling mistakes.

Engraving the Stanzas of Thiruvaasagam was going on daily past midnight. What a surprise! The work of engraving of all 658 Stanzas were completed within few months. About 22 youths were involved with this work. This work proceeded smoothly using quality granite Stones and .This rare scenario is still afresh in my mind.

I ran short of money for the engraving work. During this time Mr.Balasingam an Accountant in London who financed my visit to London to deliver a speech at the fortieth anniversary of the London SAIVA MUNNETRA SANGAM. He made me to stay at his house and accompanied me with him to the function. He handed over to me 18 Lakhs as his contribution. The contributions I received there was spent on the engraving works of Thiruvaasagam Stanzas. Again what a surprise! Miss Selvanayagam a Teacher from Urumpirai too contributed a sum of money. The engraftment works were completed successfully.

Last year I visited Thiruchendoor to deliver Speeches on the whole six days on account of KANDASHASHTY VIZA, at the invitation of Mr.Sivaganasothy from London. After my return and during my stay in Colombo a thought arose in my mind, why not build a THATCHANAAMOORTHY Temple on the middle of the THIRUVAASAGA ARANMANAI? The time was 4 a.m. I spoke to Mr.Purushoththaman a Sculptor about what had arouse in my mind over the telephone, He replied enthusiastically "Yes". Once I returned to Jaffna the Foundation stone was laid for the construction of this Temple. What a surprise! I came to know that as per the invitation of the Kurukkal of the Kondavil Iyappan Temple some Indian Sculptors had arrived to create some statues and are residing near that Temple. Mr. Purushothaman took me to meet them. I handed over an advance of Rs.10 lakhs and requested to create a $4\,^{1}/_{2}$ feet tall Statue of Lord Thatchnaamoorthy. When the work was completed within two months Mr.Purushothaman brought this Statue in his Vehicle to the Sivapoomi School. We placed the Statue in Water and ABISHEGAM was done daily.

After seeing the Chariot carved out of Stone at Valluvar Kottam I was worried there is no such chariot in Jaffna. When I mentioned this to Mr.Purushothaman he replied "don't worry I will see that a Chariot is carved out of stone through my sculptors". He brought Granite stones from Nawalapitiya. At that instance I didn't have any money with me. I was much worried. By chance wife and son Aravindan of late Kailasapillai former Chairman of AGILA ILANGAI HINDU MAA MANRAM had come to Keerimalai to perform rites connected with the first death anniversary of Late Kailasapillai. I requested them to visit the ongoing construction work at the THIRUVAASAGAM ARANMANAI at

Navatkully on their way back to Colombo. On the following day when I was at Navatkully Mrs Kailasapillai son Aravindan with RISHI THONDUNATHA SWAMIGAL came to the THIRUVAASAGA ARANMANAI. They praised the efforts of the THIRUTH THONDU after seeing it. I said to them due to dearth of Funds the upper Part of the Chariot is awaiting completion. Mr.Aravindan said "don't worry I will provide funds to complete the making of this Chariot fully out of Granite Stone" Now by displaying the 21 feet high CHARIOT at Navatkully which carries the pride of being the first of its kind in Sri Lanka.

When the Construction of the Thiruvaasaga Aranmanai was underway many came and had a look and went. The younger Ejamaanaar of the Nallur Kandaswamy Temple Kugasri Sayandan Kumaradaas paid a visit and rendered his advice after going around the Site. Brother Kambavaathiry Jeyaraj too paid a visit and praised me. He was of the opinion that if 108 Statues of Sivalingam are placed inside the premises of the Thiruvaasaga Aranmanai it will look splendid. From whom am I to beg for this? I asked him. He asked me after undertaking this massive amount of work is this impossible? He looked slightly angry.

Because I was thinking about placing the Statues of Lord Sivalingam I was suffering from loss of sleep many a times. I was astonished after inquiring about the cost of sculpting a Statue of Lord Sivalingam from a few Sculpters. My mind did not rest. Vinoth the person who engraved the Stanzas of Thiruvaasagam brought and showed me the Statue of Lord Sivalingam sculpted as per the size I had requested. But where am I to go for the Money to bear the cost as per his Estimate? I prayed to Thurkkai Ambaal.I use to pray to Tellippalai Thurkkai Ambaal daily and submit my vows to her. Ambal pacifies me. So in this situation I paid for the first statue of Sivalingam from my personal funds.

The Sculptors at Vivekaanandar Nagar brought down 10 Statues of Lord Sivalingam at a time. It was a testing time. Some devotees helped. I visited Australia again in April 2018.I decided that the contributions that I receive will be spent on the construction work of the Aranmanai. A cousin sister living in Australia Mrs.layasiri contributed the amount for sculpting of 6 Statues of lord Sivalingam. Inaddittion few well wishers too contributed. My dream became true.

As usual Dr.Manomohan a Cardiologist in Australia and Mrs.Mano mohan invited me for dinner." they said leave your worries, we will provide Funds for the balance works, and for the construction of the parapet wall, we will not let you down" I felt that this couple had come as God in the form of human. I was surprised after noticing their humbleness, obedience in them. I praise that they are going to be one of my relations, God has bestowed on to me.

Mr Shanmuganathan of Oorelu was of immense support to me in overseeing the construction work of the Aranmanai. He is a person who oversees the construction works of the Sivapoomi Trust. He and his workers provided valuable support for the Aranmani to look beautiful. We cannot describe the service rendered by Sitpakalaaviththagar Kaliyaperumal Purushothaman of Periyakuththavakkarai Chidambaram Tamilnadu. He is a Sculptor who respects my word. He and his group's work off hand displays a splendid work of Art.

All the members of the Sivapoomi Trust are of great support to my ideas. Mr.K.Navaneethan and Mr.P.Sathees are looking after the administrative works well.

We can point out that their contribution is excellent in the functioning of the matters connected with the Aranmanai.

It is my wish that the Thiruvaasaga Aranmanai at the entrance to the Jaffna Peninsula should be safeguarded like one's eyes by the future generation. The thought originated on the Streets of Thiruvannamalai had became a reality at Naavatkuli Street. I can't even think of this. This cannot be mentioned by word or letters. It looks surprising! Those who see the Thiruvaasaga Aranmanai in person will feel about it. This work of devotion was not undertaken to earn any name or fame. This has been created ceaselessly for the existence of Saivaism on this Soil and for the existence of Thiruvaasagam considered a rare Medicine. It is my belief that this Thiruvaasaga Aranmanai and Thiruvaasagam will exist forever in future times.

***

# இறைவனால் எழுதப்பட்ட திருவாசகம்

சிதம்பரத்தில் மணிவாசகர் வாழ்ந்து வரும் நாள்களில் ஒருநாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து தான் பாண்டிய நட்டைச் சேர்ந்தவரென்றும், சிவபிரான் மணிவாசகருக்காகச் செய்த அருட்செயல் உலகெங்கும் பரவியுள்ளது என்றும் வியந்து கூறி மணிவாசகர் பல சமயங்களிலும் பாடிய பாடல்களை முறையாகச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். மணிவாசகரும் அந்தணரை அருகிலிருத்தி தாம் பாடிய திருவாசகப் பாடல்கள் அனைத்தையும் சொல்லியருளினார். அந்தணரும் தம் திருக்கரத்தால் அவைகளை எழுதி முடித்து 'பாவை பாடிய தங்கள் திருவாயால் ஒரு கோவை பாடுக' என்று கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கு இணங்கிய மணிவாசகர் இறைவனது திருவடிப் பேற்றை உட்கருத்தாகக் கொண்ட இனிய கோவையார் என்ற நூலை அருளிச் செய்தார். கேட்ட அந்தணர் அந்த நூலையும் தம் திருக்கரத்தால் எழுதி முடித்தார். பின்னர் அந்தணர் வடிவில் வந்த சிவபெருமான் மறைந்தார். அதைக் கண்ட மணிவாசகர் இப்படித் தன்னை ஆட்கொண்டவர் சிவபிரானே என்பதை அறிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் திருவருளை எண்ணி வழுத்தினார்.

மணிவாசகரின் திருவாசகத்தையும், திருக்கோவையையும் தம் கையால் எழுதிய இறைவன் அந்நூல்களை உலகறியச்செய்ய வேண்டி நூலின் முடிவில் 'திருச்சிற்றம் பலமுடையான் கையெழுத்து' எனத் திருச்சாத்திட்டு தில்லைச் சிற்றம்பலத்தின் வாயிற்படியிலே வைத்தருளினார். காலையில் கோயிலுக்குப் பூசை செய்ய வந்த அர்ச்சகர் வாயிற்படியில் நூல் ஒன்று இருப்பதைக் கண்டு அதையெடுத்து ஆண்டவனால் தரப்பட்டதாகும் என்ற அன்புணர்வோடு பிரித்துப் பார்த்துப் படித்தார். அவ்வேடுகளின் முடிவில் திருவாதவூரர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து என்றிருந்ததைக் கண்டு உடல் சிலிர்த்து இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய நூல்களில் இது தலையானது என்று புகழ்ந்து இந்நூலைப் பாடிய வாதவூரரைச் சென்று கண்டு வணங்கினார். திருவாயிற்படியில் இந்நூல் இறைவனால் வைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சியை அவரிடம் தெரிவித்தார். முடிவில் அந்தணர் அனைவரும் இந்நூலின் பொருளைத் தாங்களே விளக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு மணிவாசகர் இதன் பொருளைத் தில்லைச் சிற்றம்பலத்தில் வந்து தெரிவிக்கின்றேன் என்று சொல்லி அவர்களோடு சிற்சபைக்கு வந்து இந்நூற் பொருள் இச்சபையில் எழுந்தருளியுள்ள ஆனந்தக் கூத்தப்பெருமானே ஆவன் என்று சுட்டிக்காட்டி அச்சபையில் எல்லோரும் காண மறைந்தருளினார். இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் வியந்து மகிழ்ந்து தொழுது போற்றினர். நடராசப்பெருமான் மணிவாசகருக்கு தம் திருவடிகளிலே இரண்டறக் கலக்கும் பேரின்பப் பேற்றைத் தந்து அவரை ஆட்கொண்டருளினார்.

**[நன்றி : திருவாசகம் – திருவாவடுதுறை ஆதீன வெளியீடு]**

# சிவபூமி திருவாசக அரண்மனை திறப்பு விழா (2018)

யாழ்.நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி திருவாசக அரண்மனையின் திறப்பு விழா நிகழ்வு கடந்த வருடம் ஜூன் மாதம் 24ஆம் திகதியன்று இடம்பெற்றது. மாலை 4.00 மணியளவில் மங்கள வாத்தியம் சகிதம் பிரமுகர்கள் அழைத்துவரப்பட்டு, அரண்மனை நுழை வாயிலில் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற திருமுறைப் பாடல் ஓதப்பட்டதுடன், அவுஸ்திரேலியா வைத்திய நிபுணர் மனோமோகன் தம்பதிகளால் நாடா வெட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து உள்ளே விநாயகப் பெருமானுக்கு வணக்கம் செலுத்தப்பட்டு சிவபுராணமும் ஓதப்பட்டது. இதன்பின், கருங்கல் இரதத்தை கொழும்பு மனிதநேய அமைப்பின் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். தொடர்ந்து அரண்மனையின் இரு பக்கங்களிலும் கருங்கல்லில் பதிக்கப்பெற்ற திருவாசகப் பாடல்களும் பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது. திருவாசக அரண்மனையில் அமைக்கப்பட்ட திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையத்தை லண்டனில் இருந்து வருகை தந்த திரு.சு.பாலசிங்கம் அவர்கள் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து அரண்மனை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட அரங்கில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த குமார வயலூர் திருமுறைக் கலாநிதி திருஞான. பாலச்சந்திரன் ஓதுவார் அவர்கள் வழங்கிய திருவாசகப் பாடல்களின் பின், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் உரையாற்றினார்.

இதன்பின் கட்டடம் மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கான கௌரவம் இடம்பெற்றது. தொடர்ந்து திருவாசக அரண்மனை தோற்றம் பெறுவதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்த அவுஸ்திரேலியா வைத்திய நிபுணர் வ.மனோ மோகன் அவர்கள் உரையாற்றினார். இதன்பின், கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து ஓதுவார் திருஞான.பாலச்சந்திரன் அவர்கள் வழங்கிய திருவாசக இசைவிருந்து சிறப்பு அம்சமாக இடம்பெற்றது. இவர் பாடி ஒலிப்பதிவு செய்யப்பட்ட திருவாசகப் பாடல்கள் முழுமையாக அடங்கிய இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் முதல் இறுவட்டை கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களிடமிருந்து வைத்திய நிபுணர் வை. மனோமோகன் அவர்கள் பெற்றுக்கொண்டார். திறப்புவிழா மற்றும் கும்பாபிஷேகத்தை யொட்டி சிறப்பு மலரொன்றும் வெளியிடப்பட்டது. மலரின் முதற்பிரதியை சிவபூமி அறக்கட்டளை பொருளாளர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் அவர்கள் நல்லை ஆதீன முதல்வருக்கு வழங்கி வைத்தார்.

***

*வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்*
*ஒருமொழியே என்னையும்என் னுடையனையும் ஒன்றுவித்துத்*
*தருமொழியாம் என்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்*
*குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே!*

**(வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்)**

# சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் கும்பாபிஷேகப் பெருவிழா (2018)

யாழ். நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் கடந்த வருடம் ஜூன் மாதம் 25 ஆம் திகதியன்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. சித்தன் கேணி வீணாகான குருபீடத்தின் முதல்வர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைத்தார்கள்.


மங்கள வாத்தியங்களுடன் கும்பங்கள் எடுத்துச் செல்லப்பட்டு ஸ்தூபி கலசத்துக்கான அபிஷேகம் செய்யப் பட்டது. இதனைத் தொடர்ந்து மூல மூர்த்தியான சிவதெட்சணா மூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும், திருக்கோவில் உட்பகுதியில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் இரண்டரை அடி உயரமான கருங்கல்லில் வடிவமைத்திருக்கும் 108 லிங்கங்களுக்கும் அபிஷேகம் செய்யப் பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளின் பின், அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது.

மகா கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஓதுவார் திருஞான. பாலச்சந்திரன் அவர்களது திருவாசக இசைவிருந்தும் இடம்பெற்றது.

நாவற்குழி திருவாசக அரண்மனை மற்றும் திருக்கோயில் கட்டட வேலைகளை ஊரெழு திரு.க.சண்முக நாதன் அவர்களை முதல்வராகக் கொண்ட நிறுவனத்தின் பணியாளர்களும், திருக் கோயில் சிற்ப வேலைகள் மற்றும் கருங்கல் இரதம் வடிவமைப்பு என்பனவற்றை இந்தியா, சிதம்பரம் சிற்பக் கலாவினோதன் திரு.கலியப் பெருமாள் புருஷோத்தமன் தலைமையிலான சிற்பக் கலைஞர்களும், கருங்கல்லில் திருவாசகப் பாடல்களின் எழுத்துப் பதிப்பை கிளிநொச்சி விவேகானந்தநகர் ஆனந்தன் வினோத் அவர்களது தலைமையிலான சிற்பக் கலைஞர்களும் வடிவமைத்து இருந்தார்கள். திரு.ஆ.வினோத் தலைமையிலான கலைஞர்களது கை வண்ணத்திலேயே திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் 108 கருங்கல் லிங்கங்களும் உருவாக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

* * *

## திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப்



*திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமைக்குரியவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஜி.யு.போப் என்பவராவர். 133 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1886ஆம் ஆண்டு இந்த மொழிபெயர்ப்பை செய்திருக்கிறார்.*

*இவர் 1820 ஏப்ரல் 24ஆம் திகதியன்று கனடாவில் பிறந்தவர். கிறிஸ்தவ சமயப் போதகராகப் பணியாற்றிய இவர் 1839 ஆம் ஆண்டு இந்தியா தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ் முதலான வேறு மொழிகளையும் கற்றதுடன் அங்கு 40 வருட காலம் சமயப் பணிகளிலும் ஈடுபட்டார். 1885 ஆம் ஆண்டு முதல் 1908ஆம் ஆண்டு வரை இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளைக் கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றினார். இவர் திருவாசகம் மட்டுமல்ல, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஜி.யு.போப் 1908 ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதியன்று காலமானார்.*

# சிவபூமி திருவாசக அரண்மனை திறப்புவிழா,
# சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா (2018)













நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலின் மண்டலாபிஷேகப் பூர்த்தி நிகழ்வு (18.07.2018)





தென்னிந்தியா சிரவை ஆதீன குருமுதல்வர் திருவாசக அரண்மனைக்கு வருகை (ஜூலை 2018)



இந்தியாவிலிருந்து வருகை தந்த சிந்துஜா அவர்களின் சங்கீத கதாப்பிரசங்க நிகழ்ச்சி (நவம்பர் 2018)



குருபகவான் பெயர்ச்சியையொட்டி நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகள் (செப்ரெம்பர் 2018)





## இந்தியாவிலிருந்து வருகைதந்த ஓசூர் திருநெறிய அடியார் கூட்டத்தினர் நாவற்குழி திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதலை நிகழ்த்தினர் (டிசெம்பர் 2018)







## சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில்




குடிநீர் விநியோக இயந்திரம்



திருவாசக அரண்மனை திறப்புவிழாவில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த தமிழ்நாடு குமாரரவயலூர் திருமுறைக் கலாநிதி திருஞான.பாலச்சந்திரன் ஓதுவார் அவர்கள்






## நாவற்குழி திருவாசக அரண்மனை - திருவாசக விழாவில் (12.07.2019)
## யாழ். வருகைதரும் இவர்கள்



தமிழ்நாடு திருமுருகன்பூண்டி
திருமுருகநாதசுவாமி திருமடம் முதல்வர்
தவத்திரு சுந்தரதாச அடிகளார் சிறப்புரை.



தமிழ்நாடு திருமுறைக்கலாநிதி
திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்கள்
திருவாசக கச்சேரி.



அவுஸ்திரேலியா சிட்னி
இதய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி
வ.மனோமோகன் அவர்கள் வாழ்த்துரை.




தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த
தவத்திரு அரிகர தேசிக சுவாமிகளின் திருமுறை
இன்னிசை சொற்பொழிவு (செப்ரெம்பர் 2018)



## இறையடி சேர்ந்த, சிவபூமி அறக்கட்டளை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்களை நன்றியுடன் வணங்குகிறோம்!



அமரர் க.சிவாஜி அவர்கள்
உப தலைவர்
சிவபூமி அறக்கட்டளை





அமரர் கிட்ணர் பாலச்சந்திரன் அவர்கள்
அமெரிக்கா
சிவபூமி முதியோர் இல்லம் ஸ்தாபிப்பதற்கு
பேருதவிபுரிந்த பரோபகாரி

# இமய சாதனை படைத்தனை!

பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா

திரு வாசகத்தை ஓதுதல் படித்தல்
உட்பொருள் தெளிவுற விரித்தல்
தருமமென் றெண்ணித் தாழ்விலாப் பணிசெய்
தங்கம்மா அன்னையின் அணைப்பால்
உரு வெடுத்திட்ட உயர்திரு ஆறு
திருமுருகப் பெயர்ச் செயலோன்
பெரு மனம்வைத்திப் பெருந்திருப் பணியைப்
பேணியே இயற்றினன் வாழி!

சொல்லிலாற் செயலாற் தொண்டினைத் தொடரும்
தூயவா உன்திருப் பணியை
நல்லவர் மதிப்பர் போற்றுவர் துதிப்பர்
நாள்தொறும் உன்புகழ் நிலைக்க(க்)
கல்லினிற் சமைத்தாய் கனிச்சுவை சிந்தும்
கவின்திரு வாசகம் தன்னை
வல்லவா சைவர் வாழ்வெலாம் சிறக்க
வந்தசெஞ் சொல்வ நீவாழி!

தேனினுமினிய திரு வாசகத்தைத்)
திசைதொறும் திசைதொறும் பரப்ப
மானுடர் பலபேர் முயன்றனர் இந்த
மாநிலம் பயனுற என்றே
ஊனினை உருக்கி உயிரினிற்சுவறும்
உயர்திரு வாசகம் தன்னை
வானினும் உயர்ந்த புகழ்தனைப் பெறநீ
வடித்தனை கல்லினில் வாழி!

தமிழறி புலவோர் தரணியிற் புகழும்
தவத்திரு வாதவூர்ப் புலவன்
அமிழ்தினு மினிய வாசகம் தன்னை
அருளியே புகழுடல் பெற்றான்
இமிழ்கட லுலகிற் கல்லினில் அதனை
இருத்தியே திருமுருகன் தான்
திகழ்புகழ் பெற்றான் திருநீறு போலத்
திசையெலாம் அவன்பெயர் பொலியும்!

மார்கழி மாதம் பிறந்து விட்டாலெம்
மண்ணிலே திசையெலாம் ஒலிக்கும்
பேர்பெறு திருவா சகப்பொருட் பெருமை
பேசவே எனத்தினம் வாழும்
ஊர்மலி இந்த யாழ்ப்பாண மண்ணில்
உவந்துஅத் தேனினைக் கல்லிற்
பார்எலாம் புகழப் பதித்த நின்பணியைப்
பாடுதல் வாழ்த்துதல் கடனே!

மேலைநாட் டவரும் மெச்சியே புகழ்ந்த
மேன்மைகொள் வாசகம் அதனை(ச்)
சாலவே கல்லிற் செதுக்கியே இமய
சாதனை படைத்தனை ஐய!
ஏலவே இதனை இரசித் திதயத்தே
இருத்திய அனைவரும் மகிழப்
பாலையில் நல்ல பசுந்தரை கண்ட
பான்மையைப் பாடினம் வாழ்க!

* * *

## எட்டாம் திருமுறையின் சிறப்பு

மணிவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகப் போற்றப்பெறுகின்றன. இறைவனே இவரிடம் ‘பாவை பாடிய வாயால் கோவை பாடுக’ எனக் கேட்டுப் பெற்ற ‘திருக்கோவையார்’, நிலையிலா உலகியல் இன்பத்தையும், நிலையுடைய பேரின்பத்தையும் இணைத்துப்பாடும் இணையிலாப் பனுவலாகத் திகழ்வது. சிற்றம்பலவர் திருக்கரத்தால் எழுதிய பெருமை இவர் அருளிய எட்டாம் திருமுறைக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

திருவாசகத்திற்குப் பொருள் கேட்ட அன்பர்கட்கு வாசகத்தின் பொருள் நடராசப் பெருமானே என்று காட்டி அந்நடராசப் பெருமான் திருவடியிலேயே இரண்டறக் கலந்த மேன்மையும் இம் மணிவாசகருக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

திருவாசகத்தின் தொடக்கம் “நமச்சிவாய” என்பது. முடிவு “அம்மை எனக்கு அருளியவாறு யார் பெறுவார் அச்சோவே” என்பது. இது நமக்கு இறைவன் அருளிய திறத்தை வியந்து போற்றுவதாய் அமைந்துள்ளது. திருக்கோவையார் நிறைவில் “உற்றவர்க்கு ஊரன் மற்றுயாவர்க்கும் ஊதியமே” என நிறைகிறது.

திருவாசகத்தின் முதலடியையும், திருக்கோவையாரின் இறுதி அடியையும் இணைத்துப் பார்த்தால், உயிர்க்கு ஊதியம் திருவைந்தெழுத்து என்பதே முடிவாக நமக்கு மணிவாசகர் உணர்த்தியுள்ளமை இனிது விளங்கும்.

**(நன்றி: திருவாசகம் – ஞானசம்பந்தம் பதிப்பகம்)**

# அரியபெரும் அரண்மனையை அமைத்த இந்த அற்புதமும் ஆண்டவனின் அருளே!

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

உலகமதை உய்விக்க உதித்த நல்ல
ஒப்பற்ற வாசகனார் அருளிச்செய்த
விலையதிலா வாசகமாம் அரிய நல்ல
விண்ணவரின் அமிழ்தமதை வெல்லும் தேனை
தலமதனில் இதுவரையில் எவரும் எண்ணா
தனித்த பெரும் அரண்மனையை அமைத்து நன்றாய்
பலர் புகழக் கல்லதனில் பதித்தே வென்றான்
பார் புகழும் திருமுருகப் பெரியோன் வாழி!

உளம் உருக உணர்வுருக உயிரும் சேர்ந்து
உருகுகிற பேரின்பப் பனுவல் தந்த
நலம் மிகுந்த வாசகனார் சைவம் தன்னில்
ஞானத்தின் குறியீடாய் நாளும் நிற்பார்
நிலம் முழுதும் ஆளுகிற ஐயன் தன்னில்
நிகரில்லா வாசகத்தைப் போற்றி நல்ல
பலம் மிகுந்த அரண்மனையை அமைத்த எங்கள்
பார்புகழும் திருமுருகப் பெரியோன் வாழி!

ஒப்பற்ற வாசகத்தின் ஒரு சொல்தன்னை
ஓர்ந்துள்ளம் பதித்திட்டால் பிறவி மாயும்
எப்பற்றும் அறுந்தின்பக் கடலில் மூழ்கி
இறை அடியைக் காணுகிற பேறு நல்கும்
தப்பற்ற வழியதனில் நம்மை ஈர்த்து
தனித்திறைவன் பாதைதனில் தரிக்கச் செய்து
முப்பற்றின் தளையறுத்து முழுதாய் நம்மை
முக்கண்ணான் திருவடியில் முனைந்து சேர்க்கும்!

கல்லால மரத்தினடி நின்று ஐயன்
காட்சிதனைத் தந்திடவே கனிந்து நெஞ்ச
உள் ஆழக்கடலதனில் இறையைத் தேடி
ஒன்றியதால் வாசகனார் தந்த நல்ல
எல்லாரும் உருகுகிற பாக்கள் தம்மை
இறையருளால் கல்லதனில் பதித்து எங்கள்
வல்லாளன் திருமுருக ஐயன்தன்னை
வாயார மனதார வையம் வாழ்த்தும்!

ஓங்குகிற அரண்மனையை அமைக்கத் தங்கள்
உடல் பொருளோடாவிதனை உவந்தே ஈந்தோர்
தாங்குகிற புகழதனால் நிலைத்து வாழ்வர்
தர்மமதால் இம்மையொடு மறுமை தன்னில்
வீங்குகிற அறம் ஓங்க விளைந்து நிற்கும்
விளங்குகிற சந்ததியும் வாழ்ந்து நிற்கும்
ஏங்குகிற மனத்தோடு இவரைச் சேர்த்து
ஏற்றிய நல் பணிசெய்த ஏந்தல் வாழ்க!

வாசகத்தின் பொருளென்ன என்றே அன்பர்
வாஞ்சையுடன் கேட்டிடவே இறையைக் காட்டி
தாசனென தானும் அவன் ஒளியைச் சார்ந்த
தன்னிகரில் வாசகனார் பெருமை நிற்க!
மாசதிலா அரண்மனையைச் சமைத்துத் தந்த
மாண்புடைய திருமுருக! உன்னால் இன்று
தேசுபுகழ் ஈழமதன் அனைத்துப் பேர்க்கும்
சேர்ந்ததுவே செகம் உன்னைப் போற்றும் ஐயா!

நரியதனைப் பரியாக்கி நாதன் அன்று
நல்ல மணிவாசகனார்க் கருளே செய்தான்
அரியபல வேலைகளை அவனுக்காக
அன்றிறைவன் செய்ததனை அவனி தேறும்
நெறியதிலா வாழ்வதனால் வருந்தும் எங்கள்
நேரதிலா இளையவரை நிமிரச் செய்ய
அரியபெரும் அரண்மனையை அமைத்த இந்த
அற்புதமும் ஆண்டவனின் அருளே கண்டோம்!

***

## காக்கும் கற்சோலை நிழல்

**- த.ஜெயசீலன் -**

பளிங்கினிலே பொறித்த 'வாத வூரன்' பாக்கள்
பார்ப்போரின் மனச்சுவரில் பதிந்து கொள்ளும்
எழுந்த கற்தேர், பிரதான கோயில், பாவை
இரசிக்கின்ற லிங்கங்கள், யாவும் ஞான
உலகை நாம் காணவைக்கும். "கருங்கற் தாளில்
உளி சமைத்த கவி" இதெனும் உள்ளம். 'நாவற்
குழி' யும்' 'மகா பலிபுரம்' போல் மகிமை நாளை
கொள்ளும்! இதெம் தமிழ்சைவப் பெருமை சொல்லும்!

யாராரோ எதற்கோ அரண் மனைகள் மண்ணில்
அமைத்ததுண்டு... தமிழ் சைவ ஞானத் தேறல்
மாணிக்க வாசகரின் வரிக ளுக்கு
மனைசமைத்த கதை உலகில் எங்கே உண்டு?
ஆர்வலர்கள் நிலம் பொருளும் அருள... எங்கள்
'ஆறுதிரு முருகன்' நட்ட எழிற் கற் சோலை
காலத்தை வெல்லும்... யாழ்புகழைச் சொல்லும்...
காக்கின்ற நிழலாகும்..... செழிக்கும் என்றும்!

[சிவபூமி திருவாசக அரண்மனை திறப்புவிழா சிறப்பு மலரிலிருந்து]

# நாவற்குழியைச் சிவலோகம் ஆக்குவித்து...

கவிஞர் சோ.பத்மநாதன்

மாபா ரதத்தை மலைமேல் எழுதியவன்
போல்வா சகத்தைப் பளிங்கில் பொறிப்பித்து
காலாதி காலம் காணும் நிலை பேறுதந்த
மேலோன் திருப்பணியை வியக்கின்றோம் அம்மானாய்!

காவற் கடவையொடு கண்டிநெடுந் தெருக்கிடந்த
நாவற் குழியில் சிவநாமம் ஒலித்தெமது
பாவச் சுமைகள் பாறவழி செய்த அன்புத்
தேவைத் திருமுருகைப் பாடுவதுங் காண் அம்மானாய்!

நூற்றெட்டு லிங்கம் நுழைவாயில் அலங்காரம்
காற்று வெளியினிடை அடியாரைக் காக்கவென
வீற்றிருக்கும் தட்சிணா மூர்த்தி அடிதொழுதால்
நேற்றைத் துயரங்கள் நீறாகும் அம்மானாய்!

தேவர்க்கும் எட்டாச் சிவபெருமான் பெருந்துறையை
மேவிக் குருபரனாய் வந்ததுவும் பாண்டியனார்
தாவுபரி கொள்ளத் தந்தநிதி ஏற்றருளி
சேவகனாய் வந்த செய்தி பாடுதுங்காண் அம்மானாய்!

கோத்தும்பி, பொற்சுண்ணம், ஊசல், திருச்சாழல்
மூத்த திருப்பதிகம், திருவார்த்தை, எம்பாவை,
யாத்திரை, பூவல்லி, தெள்ளேணம் என்றெல்லாம்
கோத்தான் வருகவெனக் கூவுதுங்காண் அம்மானாய்!

ஊனை உருக்கி உள்ளொளியைப் பெருக்குகிற
தேனைத் திருவா சகமென்னும் தெள்ளமுதை
வானோர் வாயூற வழங்குமணி வாசகனை
ஞானப் பேரூற்றைப் பாடுதுங்காண் அம்மானாய்!

***

# ஏற்றமுறு திருமனை என்றென்றும் வாழியவே!

கலாநிதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு

உலக மளாவிய உண்மைப் பொருளுறை
உயர்சைவ நெறியினை ஓர்ந்து தெளிந்து
நிலவு லாவிய நிர்மல னடியினை
நெஞ்சத் திருத்தி நினைந்து உருகிக்
குலவு தீந்தமிழ்க் கொடையென அருளிக்
குவலயம் பயனுறச் செய்தமணி வாசகரின்
அலகிலாத் திருவாசக அமுத முண்டவர்
அல்லற் பிறவி யறுத்தே உய்வரே!

உய்யவே மாந்தர் உதவுதிரு வாசகத்தை
உளிகொண்டு கையினால் உவப்புறக் கருங்கல்லில்
அய்யன் சிவபெருமா னருளினாற் பொறித்திடும்
அரிய திருப்பணி ஆற்றி மகிழ்ந்திட
மெய்யதாம் நாவற்குழி யூர்க்கண்டி வீதி
மேவு மருங்கில் அரண்மனை அமைத்தே
துய்யதாய் முடித்தசிவ பூமியறக் கட்டளைத்
தொண்டு நிறுவனம்போல் தொல்லுலகி லேதுளதோ?

ஏதமில் மனத்தர்: ஈசனடித் தொண்டர்
ஈந்திட்ட பத்துப் பரப்பளவு நிலத்துடன்
கோதற உடல்நோய் குணமாக்கும் மருத்துவர்கள்
கூடவே கொடுத்த கோடி முப்பது லட்சம்
ஆதர வோடுயர் அரண்மனை அமைக்கவும்
ஆன்மீகப் பயணம் அறாமற் றொடரவும்
வேதங்க ளேத்தும் விண்ணகப் பரம்பொருள்
வேலியாய் நின்று வேலையை முடித்ததே!

தென்திசை நோக்கிய திருவாசக அரண்மனைத்
திவ்விய நடுவண்சிவ தெட்சணா மூர்த்தியும்
அன்றுகல் லாலின்கீழ் சொல்வர்க் கறமுரைத்தோன்
ஆலயங் கொண்டு அருள்பா லிக்கவும்
நன்றுசெய் கருவறை, விதானம், மண்டபம்
நாடியே சீமெந்தா லமைத்து நூற்றெட்டு
நின்றொளிர் சிவலிங்கச் சிற்பங்கள் செய்து
நீண்டுள கோபுர மீதினில் நிறுத்தினார்.

கருங்கல் ரதமொன்று கலைவடிவக் கோயில் முன்
காட்சிதரும் பேரழகைக் கண்டுகை தொழுதிடலாம்
அருவுரு வாய்நின்ற சிவலிங்கம் நடுவிருக்கும்
அழுதழுது அடிசேர்ந்த அன்பர்மணி வாசகரும்
திருவுருவாய்த் தென்மேற்கில் திகழும் திருக்கோலத்
திருத்தேர் இருபத்தோ ரடியுயர மாயிருக்கும்
பெருகிவரும் வெள்ளமென உருகிநிற்கு முள்ளத்தால்
பிறவாத பேரின்பப் பெருவாழ்வு பெற்றிடலாம்.

தெய்வத் தமிழான திருவாசக முழுமையுடன்
திசைமொழிகள் பதினொன்றின் மொழிபெயர் வண்ணங்களும்
கையதன் கலையதாய் மேற்கிலும் கிழக்கிலும்
கண்டிடுசுவ ரோவியங்கள் கதை பல பேசிநிற்கும்
செய்யநீள் மண்டப அரண்மனை முப்புறம்
சிறந்திடும் நூற்றெட்டுக் கருங்கற் சிவலிங்கம்
வையகத்துச் சிவதொண்டர் வழிபடப் பிரதிஷ்டை
வரிசையாய்ச் செய்தனர் வானகம் வாழ்த்தவே!

அரண்மனை வடக்கில் அறைகள் ஐந்தமைத்து
ஆராய்ச்சி யாளர் அமைதியுடன் தங்கவும்.
அருஞ்சைவ நூல்களால் ஆனதொரு நூலகமும்
அற்புதமாய்க் கொண்டொரு ஆன்மீக இருப்பிடம்
உற்பவமாய் நிலாமுற்றம் ஓங்குவாயிற் கோபுரம்
உத்தம இறைபணிக்காம் அலுவலகம் அனைத்துமே
சிற்பரனார் திராவிடநற் திருக்கலை மரபுடனே
தெய்வீகத் திருவாசக அரண்மனை திகழ்ந்திடுமே!

வைத்திய கலாநிதிகள் மனோமோகன் சிவகௌரி
வள்ளன்மை யாலுதித்த வாசகத்து அரண்மனை
இத்தரையில் சிவபூமி இனியசேவை நிறுவனத்தின்
இணையிலாப் பெருங்கருணை இயற்றுவித்த புனிதமனை
சத்தியத்தின் நித்தியமாய்ச் சைவமதம் தழைப்பதற்குச்
சான்றாக ஈழத்தில் கருங்கல்லால் முதன்முதலில்
எத்திசையும் புகழ்மணக்க எழுந்ததிரு வாசகத்து
ஏற்றமுறு திருமனை என்றென்றும் வாழியவே!

இருபதோ டைந்து சிவலிங்கச் செலவினை
ஏற்றுநிதி யளித்தனர் ஆஸ்ரேலிய அன்பர்கள்
பெருகிய மனத்தினராம் மருத்துவத் தம்பதியர்
பெட்புடன் ஈந்த பெருநிதி தவிர்த்துமே

மருவியே மேல்வரும் தேவைக ளனைத்தையும்
மாண்புறச் சிவபூமி நிறுவனம் ஏற்றதே!
திருவுள ஒருமகன் திருமுருகன் தலைமையில்
தெய்வீகப் பணியொன்று தேசத்தில் நிறைந்ததே!

கருங்கல்லா லிடங்கொண்ட கனித்தமிழ்த் திருவாசகம்
காசினியில் முன்னோடி யானதொரு கருமமாம்
பெருந்திருப் பேராளும் பேசரிய அரண்மனை
பேருலகில் பக்திமொழிப் பெருமைக் குரியதாம்
அருஞ்செயல் களாற்றி அன்புநெறி வளர்த்திட
அனுதினமும் உழைத்திடல் சிவபூமிக் கானதாம்
வருங்காலத் தமிழ்ச்சைவர் வாழ்வுநிலை தேயாமல்
வரம்பிட்டுக் காத்திடுதல் வையகத்தோர் கடமையாம்.

இரண்டா யிரத்து பதினெட்டா மாண்டு
இனிய ஜூன் மாதம் இருபத்து நான்கில்
அரன்புக ழாரமாம் திருவாசக அரண்மனை
அருளிடை மருத்துவத் தம்பதியர் திறந்திடவும்
வரன்முறை யமைந்த வடிவுகொள் ரதந்தனை
வளர்சைவப் பெருமாட்டி அபிராமி திறந்திடவும்
உரனசைஇ எம்பெருமான், உலகத்து நாயகன்
உளங்கொண்ட விதங்கண்டு உருகிடுதே நெஞ்சமெலாம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பினை
எடுத்துக் காட்டுமெழில் திருவாசக அரண்மனை
குன்றே யனைய கோயிலும் இரதமும்
கும்பிட்டு வாழச்செய் சிவலிங் கங்களும்,
நன்றே திகழும் நாவற்குழி யூரினை
நாடிச் செல்வோர் நற்கதி யடைவர்
மன்றே யாடும் மறைமுத லோனடி
மனதினி லிருத்தி மனிதராய் வாழ்வோம்!

## வானவர்கள் வாழ்த்துவதும் மணிவாசகர் வாழ்த்துவதும்

வானவர்-தேவர்கள். இவர்கள் இறைவனை வாழ்த்துகிறார்கள். எதற்காக? தாம் உயர்ந்து தம்மை எல்லோரும் தொழவேண்டி வாழ்த்துகிறார்கள்.மணிவாசகர் வாழ்த்துகிறார். எதற்காக? பாழ்பட்ட பிறவியை வேரறுப்பதற்காக. தேவர்கள் பதவி ஆசை மேற்கொண்டும் போகம் துய்க்க வேண்டியும், கட்டுநிலையில் வாழ்த்துகின்றனர். மணிவாசகரோ, ஆசை அறவேண்டும் அதனால் பிறவி விடவேண்டும், பேரின்ப வீடு பெறவேண்டும் என்பதற்காக இறைவனை வாழ்த்துகிறார். அப்பாடல் காண்க:

**வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்**
**தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மை எல்லாம் தொழவேண்டி**
**சூழ்த்தமது கரம்முரலும் தாரோயை நாயடியேன்**
**பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான் யானும்உன்னை பரவுவனே.**
**(திருச்சத.பா.20)**

# தித்திக்கும் திருவாசக சிந்தனைகள்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தருமை ஆதீன 26ஆவது குருமகா சந்நிதானம்

## சிவபுராணச் சிறப்பு

மக்கள் எனப்படுவோர் ஐம்பொறி உணர்வுடன் மனஉணர்வும் செம்மையாக உடையோராவார். பிறவிகளிலே மக்கட் பிறவியே மிக மிகச் சிறந்தது. இப்பிறப்பே எல்லாம் தெரிந்து செயற்பட்டுச் சிறப்பெய்தற்குரிய பிறப்பு. இக்கருத்தினை மணிவாசகர்,

**"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"**

**(அடி26-32)**

என்று உயிர்கள் தாழ்ந்த நிலையில் இருந்து எப்படிப் படிப்படியாக உயர்ந்து வளர்ந்து வருகின்றன என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

சிவபுராணத்தில் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என்றவர், குருந்தமரத்தடியில் குருநாதரைக் கண்டு உபதேசம் பெற்றமையால் "மெய்யே உன்பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என்று தெளிவாகவும், உறுதியாகவும் அறிவிக்கின்றார். வீடுறுதல் உறுதியாகலின், இறந்தகாலத்தால் உற்றேன் என்று உறுதிபடக் கூறினார்.

சிவ்புராண நிறைவில் பாட்டின் பலனைச் சுருக்கிச் சொல்கிறார். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை முந்தை வினை முழுதுமோய உரைப்பன்" (அடி.19). இங்கு மோய என்பது கெடுமாறு என்ற பொருள் தருகிறது. ஓய என்பது அவ்வளவு பொருத்தமாயில்லை.

இச்சிவபுராணத்தில் பெரும்பகுதி விளியாகவே அமைந்துள்ளது. எம்பெருமானே, பல்லூழி காலம் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துப் போனேன். இப்போது என் பொன்னடிகளைக் கண்டமையால் எல்லா வற்றினின்று விடுதலையாகி வீடு பேறுற்றேன். இது மெய்-உண்மை, புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே, தில்லையுட் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே, அல்லல் பிறவி அறுப்பானே, என ஓலமிட்டுச் சொல்லற்கரிய பரம்பொருளைச் சொல்லிய பாட்டின் பொருளறிந்து சொல்லுவார், சிவனடிக் கீழ்ச்செல்வர், பல்லோரும் பணிந்து ஏத்த வீற்றிருப்பர். பொருள் உணர்ந்து சொல்லுவதால் சிவனருள் நிறைவாகக் கிடைக்கும் என்பது இவ்வடிகளால் புலனாகும் உண்மையாம்.

## பாவைப் பாடலில் நீராடும் சிறப்பு

மடு என்பது ஆழங்காற்பட்ட நீர்நிலையைக் குறிக்கும். இதனை மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு என்பதனால் உயரத்திற்கு மலையும், ஆழத்திற்கு மடுவும் எடுத்தாளப்பட்டிருத்தலைக் காணலாம். திருவெம்பாவையில், நீராடும் நீர் நிலைகள் பற்றி மணிவாசகர் குறிப்பிடும்போது, நீர்நிறைந்து பொய்யாதிருக்கும் தன்மையால், 'மொய்யார் தடம் பொய்கை' எனப் பெயர் பெற்ற பொய்கையை முதலில் குறிப்பிடுகின்றார்.

அடுத்து, ஆர்த்த பிறவி என்னும் பன்னிரண்டாம் பாடலில் அந்நீர்நிலை, பூத்திகழும் பொய்கையாக இருக்கவேண்டும் என்பதையும், நீராடுவோர் இறையுணர்வோடு பரமனைப் பாடி நீராடவேண்டும் என்பதையும், மேலும் மலைப்பகுதியில் உள்ளார் சுனைநீரில் நீராடிச் சிறப்புறுக என்பதையும் குறிப்பிடுகின்றார்.

காதார்குழையாட என்னும் பதினான்காம் பாடலில் பொன்னாலான அணிமணிகளை அணிந்து நீராடுக என்று அறிவுறுத்துகிறார். ஓரொருகால் என்னும் பதினைந்தாம் பாடலில் பூம்புனல் பாய்ந்தாடுக எனக் குறிப்பிடுகிறார். செங்கணவன்பால் என்ற பதினேழாம் பாடலில் தாமரை பூத்த தடாகத்தில் நீராடுக என்பார்.

பங்கயப்பூம்புனல் பாய்ந்தாடுக என்று குறிப்பிடுகின்றார். அண்ணாமலையான் என்னும் பதினெட்டாம் பாடலில் பூம்புனல் பாய்ந்தாடுக என்று குறிப்பிடுகிறார்.

மணிவாசகர் நிறைவாக, போற்றி அருளுக என்னும் இருபதாம் பாடலில் மார்கழி நீராடுக என்று பூர்த்தி செய்கிறார். இப்பாடலில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் ஆற்றும் அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றி நிறைவு செய்கின்றார்.

பன்னிரு திருமுறைகளில் இதைப்போல் ஐந்தொழில் பற்றி விரிவுபடக் காண இயலாது என்பது குறிப்பிடத்தக்கது.

## எங்கள் பிராட்டியும் எங்கோனும்

பைங்குவளைக்கார் மலரால் என்ற பதின்மூன்றாம் பாவைப் பாடலில் பொலிவுமிக்க நீர் நிலையை அம்மை அப்பராகக் காண்கிறார்; நமக்குக் காட்டுகின்றார் மணிவாசகர்.

மடு என்னும் ஆழங்காற்பட்ட நீர்நிலை, பிராட்டியையும் பெருமானையும் போன்று திகழ்கிறது என்கிறார். எப்படி? பிராட்டியின் நிறம் நீலம். பெருமானின் நிறம் சிவப்பு. மடுவில் பைங்குவளை நீல மலர் பூத்திருப்பதால் அம்மையையும், செந்தாமரை மலர் பூத்திருப்பதால் சிவனையும் ஒத்துள்ளது என்கிறார்.

அங்கம் குருகினத்தால் - குருகு என்பது பறவையைக் குறிக்கும், சங்கினையும் குறிக்கும். இங்கு சங்கு, வளை அம்மையை நினைவுறுத்தியது. அந் நீர்நிலையில் அரவம் - பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன. இவை சிவனை நினைப்பிக்கின்றன.

தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால், மடுவிற்கு வருவோர் தங்கள் உடம்பில் உள்ள அழுக்கைப் போக்கிக் கொள்கின்றனர். அம்மையப்பரிடம் செல்வோர் தங்கள் ஆணவ, கன்ம, மாயை முதலிய அழுக்குகளைப் போக்கிக் கொள்கின்றனர். மலம் - அழுக்கு.

அம்மைக்கும் அப்பற்கும் உள்ள ஒப்புமைப் பொருள்கள் இந் நீர் நிலையில் உள்ளமை கொண்டு இந்நீர்மடு பிராட்டியையும் பெருமானையும் போன்றுள்ளது என்று இணைபிரியா எந்தையையும் எந்தாயையும் இணைத்துப் பாடி இன்புறுத்துகின்றார் மணிவாசகர்.

## நால்வகை தீட்சைகள்

நான்கு வகையான தீட்சைகளும் பொங்குமடுவில் நிகழ்வதைக் கண்ட மணிவாசகர், அக்காட்சியை நமக்கும் காட்டுகிறார்.

- "பைங்குவளைக் கார் மலரால் - குவளைமலர் கண்ணுக்கு உவமை. நயன தீட்சையை உணர்த்துகிறது"
- "செங்கமலப் பைம்போதால் - தாமரை மலர் இதயத் தாமரைக்கு உவமை. இது மானச தீட்சையை உணர்த்துகிறது"
- "அங்கம் குருகு இனத்தால்-குருகு என்பது பறவையைக் குறிக்கிறது. பறவை பரிச தீட்சையை உணர்த்துகிறது"
- "பின்னும் அரவத்தால் - பின்னிக் கொண்டிருக்கும் பாம்பு (அரவம்). இங்கு ஒலி அளவிலே கொண்டு வாசக தீட்சையைக் குறிப்பிடுகிறார்"

எனவே நால்வகைத் தீட்சைகளையும் இப்பொங்குமடு, அதனில் உள்ள மலர்களாலும் பொருள்களாலும் நமக்கு உணர்த்துகின்றது. இக்கருத்துணர்த்தும் பாடல் காண்க.

**பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்**
**அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்**
**தங்கள் மலம்கழுவ வார்வந்து சார்தலினால்**
**எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த**
**பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்**
**சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்**
**கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்**
**பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.**

**(நன்றி : மாணிக்கவாசகர் திருவாசகம்**
**ஞானசம்பந்தம் பதிப்பகம் – 1966)**

* * *

# தேனினும் இனிய அமுது திருவாசகம்

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம்
பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவாசகம் தேன் அமுது; தேனினும் தெள்ளிய அமுது.

**"யானே பொய், என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"**

என்று அழுது அழுது ஆண்டவனைத் தொழுதவர் மணிவாசகப் பெருமான்! சிவஞானத் தேடலின் வேட்கையில் விளைந்த விசும்பல் மொழியே திருவாசகம்! ஊனை உருக்கும், உயிரை உருக்கும். மணிவாசகர் கழிவிரக்கத்தில் தம்மைக் கரைத்து மனத்தைத் தூய்மைப் படுத்துகின்றார்.

நிலம் உழஉழப் பக்குவம் பெறுகின்றது! அந்த நிலம் தன் மடிக்குள் மறைந்திருந்த உயிர் ஊட்டத்தை விதைக்கு ஊட்டி, விளைச்சலை வீரியம் ஆக்குகின்றது. ஆலையில் பிழியப்பட்ட கரும்பே கற்கண்டாய் இனிமை தருகின்றது. அழகிய அணிகலன்கள், அபூர்வக் கலைப் பொருட்கள் முதலியன உலோகத்திலிருந்து உருமாறியவை. உருகிய உலோகமே உருவங்களாய் மாறுகின்றன. பயன்தரு பொருட்களாய் மாற மூலப்பொருள் பக்குவப்பட வேண்டும், உருக வேண்டும், இளக வேண்டும், இளக்கத்திற்குப் பின் தோன்றுகின்ற இறுக்கமே இறுதியானது, உறுதியானது.

மனம் நெகிழ்ந்து கொடுக்க வேண்டும். நெஞ்சம் பிறர் துயர் கண்டு விம்மி விம்மி அழவேண்டும். காலில் முள் குத்தும் போது கண் கலங்கி அழுகிறது. காலில் முள் குத்தும் போது கண் கலங்காதிருந்தால் உடலில் நோய் இருக்கிறது என்று பொருள் . இன்று சமூகம் நோயால் வாடுகின்றது. சமூகத்தின் ஏதோ ஒரு மூலையில் துயரம் ஏற்பட்டாலும் சமூகம் கலங்காதிருக்கிறது. கவலைப்படாதிருக்கின்றது! அடுத்த வீட்டுக் கூரை பற்றி எரியும் பொழுது அலட்சியமாய் இருக்கின்றோம். அழுகின்ற மனித மனமே மலம் கரைக்கும் மாமருந்து. அழுகை நமக்காக இருக்கக்கூடாது. சமூகத்திற்காக அழவேண்டும். தாயைத் தேடி குழந்தை அழுவதைப் போல மணிவாசகப்பெருமான் சிவஞானத்தைத் தேடி அழுதிருக்கின்றார்.

காந்தம் கண்ட இரும்புபோல் கற்போர் இதயம் கவரும் கற்கண்டுத் தமிழ் திருவாசகம்! கலத்தில் மிதந்து கடல் கடந்து மதம் பரப்ப வந்த ஜி.யு.போப் திருவாசகத்திற்கு உருகினார். அவர் திருவாசகத்தை உலக மொழியாகிய ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்ததோடு தம் கல்லறையிலும் கூடத் தாம் தமிழ் பயிலும் மாணவன் என்று பொறிக்கும்படி செய்தது திருவாசகத்தின் மேல் அவர் கொண்டிருந்த காதல் தானே!

**பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தின்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்**
என்கிறது திருவாசகம்.

இறைவன் மதுரைத் திருவீதியில் மண் சுமக்கின்றான். அவன் பொன்மேனி புண் சுமக்கின்றது. எதற்காக? தேனினும் இனிய தீந்தமிழ் பாடல்களாகிய திருவாசகத்திற்காக உலக நாயகனை விண்பழித்து மண் இறங்கச் செய்த மாத்தமிழ் திருவாசகம்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய பேரன்பு தயாபரனின் அன்பு என்கின்றார் மாணிக்கவாசகர். உலகியல் தாய்மார்களில் தர வேறுபாடு உண்டு. குழந்தை அழுதால் கூடப் பால் புகட்டாத இரக்கமற்ற தாய்மார்கள் உண்டு. குழந்தை அழுதபொழுது மட்டும் பால் புகட்டும் சராசரித்தாய் உண்டு. குழந்தை பசிப்பொழுது அறிந்து - வேளை அறிந்து பால் புகட்டுகின்ற தாயே நினைந்தூட்டும் தாய் ஆவாள். அந்த நினைந்தூட்டும் தாயினும் பேரன்பு பூண்டவன் இறைவன் என்கிறார் மாணிக்கவாசகர்.

உலக மனிதர்கள் இலாப நட்டக் கணக்குப் பார்ப்பவர்கள். வாழுகின்ற காலத்தில் முகமன் பேசுபவர்கள் செல்வமும் செல்வாக்கும் கூடிய காலத்தில் முகமன் பாடுகின்ற கூட்டம் பல்கிப் பெருகி இருக்கும்.

உறவுக் கணக்கு பெரும்பாலும் இலாப நட்டக் கணக்காகவே இருக்கும். மாணிக்கவாசகப் பெருமானும் இறைவனோடு இலாப நட்டக் கணக்குப் போட்டுப் பார்க்கிறார். இறைவனோடு கலந்த இந்த உறவில் யாருக்கு இலாபம் என்று பார்க்கின்றார்.

**"தந்தது உன் தன்னைக் கொண்டது என்றன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்.**
**அந்தம்ஒன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்ற தொன் றென்பால்?"**

என்று பாடும் மணிவாசகப் பெருமான் முடிவிலாப் பேரின்பம் பெற்றுள்ளார். ஆனால் இறைவன் தம்மிடம் இருந்து பெற்றுக்கொண்டது என்ன? என்று மணிவாசகர் கதறுகின்றார்.

ஆன்ம ஈடேற்றம் இறைவனின் அருளிப்பாடு! மணிவாசகராகிய ஆன்மா ஈடேற்றப்படுவது இறைவனின் கடப்பாடு! இறைவன் மணிவாசகராகிய ஓர் ஆன்மாவை ஈடேற்றக் குதிரைச் சேவகனாக வந்தான். கூலியாளாக வந்து மண் சுமந்தவன் பிரம்படி பட்டான். அவன் பொன்மேனி புண் சுமந்தது!

உலகத்தின் அத்தனை கோடி ஆன்மாக்களையும் ஈடேற்ற எத்தனை முறை மண் சுமப்பது? எத்தனை முறை பிரம்படி படுவது? தேனினும் இனிய திருவாசகத்தை யார் ஓதுகின்றார்களோ, அவர்கள் இறைவனின் திருவருள் இன்பத்தை எளிதாகப் பெறுவார்கள். இறைவனின் ஆன்ம ஈடேற்றப் பணி எளிதாக்கப்படும் கருவியாக இறைவனுக்குத் திருவாசகம் கிடைத்துவிட்டது. இக் காரணத்தால் இறைவன் தான் சதுரப்பாட்டில் வல்லவன் என்று எண்ணிக் கொள்வான்!

**வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.**
**(திருவருட்பா)**

என்று இராமலிங்க அடிகள் பாடியதுபோல் உண்ண உண்ண உவட்டாத தீஞ்சுவை திருவாசகம்.

**[நன்றி : மாணிக்கவாசகர் திருவாசகம்**
**ஞானசம்பந்தம் பதிப்பகம் – 1966]**

***

## திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்

பன்னிரு சைவத் திருமுறைகளில் எட்டாவதாக இடம்பெறுகின்றது திருவாசகம் எனும் மணிவாசகம். சமய குரவர்கள் பாடியருளிய நற்றமிழ் முறைகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அவற்றுள் மனிதராய் வாழும் நமக்கு மிகவும் நெருங்கிய உறவோடு விளங்குவதான தனித்துவம் கொண்டது இம் மணிவாசகத் திருநூல்.

இறைவனை அடைவிக்கும் நால்வகை நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்பட்டன. இவற்றிற்கும் மேலான சிறந்ததோர் நெறி அன்புநெறி. இன்பம் ஆவது சிவம். அந்த இன்பமாகிய சிவத்தை அடைவிப்பது அன்பு என்னும் ஆன்மநெறி. இறைவனைப் பாடும் மணிவாசகப் பெருமான், "இன்பமே! என்னுடைய அன்பே"! என்றும், "அன்பும் தாராய் அடியேற்கே"! என்றும் "பத்திவலையில் படுவோன் காண்க" என்றும் இன்பத்திற்கும் அன்பிற்கும் உள்ள நெருங்கிய உறவினைப் புலப்படுத்துவார். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மேலும் ஒரு வழிகாட்டியவர். அது உலகினர் கொள்ளும் அழுகை அன்று. அது ஞானம் முதிர்ந்த நிலையில் விளையும் பேரன்பினால் உள்ளம் கசிந்து உருகிநின்று அழும் அழுகை அது. இந்த நிலை எல்லோருக்கும் எளிதன்று.

மணிவாசகப் பெருமான் கசிந்து உருகிப் பாடிய திருவாசகப் பாடல்களை பலகாலும் பாடிநிற்போர்க்கு கற்போலும் நெஞ்சமும் கசிந்து உருகும் என்பது அனுபவம் உடையார் உரைக்கும் உண்மைமொழி. **['திருவாசகம்' – திருவாவடுதுறை ஆதீன வெளியீடு]**

# தெய்வக் கவிதைக்குள் தனியிடம் பெறும் திருவாசகம்

பேராசிரியை (திருமதி) சாரதா நம்பிஆரூரன்

பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறையாக வைத்தெண்ணப்படுந் திருவாசகம் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்டது. உலக இலக்கியங்களிலுள்ள தெய்வக் கவிதைகளுள் தனியிடம் பெறத்தக்கது "திரு" என்ற சொல்லுக்குக் "கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" எனப் பேராசிரியர் திருச்சிற்றம்பலக் கோவையார் உரையிற் குறிப்பிடுகின்றார்.

"தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச்செய்து அவரைப் பேரின்பப் பெருக்கின்கண் ஆழ்த்துதற்கட் பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை இத்திருவாசக நூல் உடைமையால், இதனிலும் மேலான அழகினைப் பெற்ற வேறொரு நூல் இல்லையென்பது தேற்றமாம்" என்று திருவாசகத்தின் அமைப்பையும், அழகையும் வியந்து பாராட்டுகிறார் மறைமலையடிகளார்.

**வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்**
**கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்**
**வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான**
**நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே!**

என்று மனங்களிந்துருகுகின்றார் இராமலிங்க சுவாமிகள்.

**தேனூறும் வாசகங்க ளறுநூறுந் திருக்கோவை**
**நானூறு மமுதூற மொழிந்தருளு நாயகனை**
**வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை**
**யானூறு படாதவகை யிருபோது மிறைஞ்சிடுவேன்!**
**(செவ்வந்திப் புராணம்)**

என்று போற்றுகின்றார் சைவ.எல்லப்ப நாவலர்.

வாதவூரடிகள் அருளிய இத்திருவாசகத்தேன் தொல்லைதரும் பிறவித்தளையை நீக்கும்; அல்லல் அறுக்கும்; ஆனந்தமாக்கும்; ஓதுபவர் கருங்கல்; மனமும் கரையும்; கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாயும்; மெய் சிலிர்ப்படையும்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிப்படுத்தும் திருவாசகத்தேன் என்றே ஆன்றோர்களாற் பாராட்டப்படுகிறது. வேதாகம உப நிஷதங்களில் இருந்து வாதவூரராகிய வண்டு திருவாசகமாகிய தேனை சேர்த்தெடுத்து நமக்கு வழங்கியுள்ளதாக வாரியார் சுவாமிகள் மாணிக்கவாசகரை வண்டாக உருவகித்துப் பாராட்டுகின்றார்.

பல மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட தேன் எவ்வாறு உடற்பிணியை அகற்றுகின்றதோ அதுபோலத் திருவாசகத் தேன் உயிருக்கேற்படும் பிறவிப் பிணியை அறுக்க வல்லது. அதனை உணர்த்துவதுபோல் தேன் என்று சொல்லைப் பல இடங்களில் மாணிக்கவாசகர் எடுத்தாளுகிறார்.

**"சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"**
**"தேசனே தேனார் அமுதே சிவபுரனே"**
**"உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து**
**புறம் புறம் திரிந்த செல்வமே"**
**"தேனாய் இன்னமுதாய்த் தித்திக்கும் சிவபெருமான்"**

என்றெல்லாம் போற்றி இறைவன் அடியார் சிந்தனையுடன் தேன்போலக் கலந்துநின்று பிறப்பை ஒழிப்பவன் என்கிறார்.

'தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே' என்று திருமூலரும், 'உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமானே' என்று அருணகிரிநாதரும் இறையின்பத்தைத் தேனைப் போன்று இனிமையானது என்று நெஞ்சுருகிப் பாடுவதும் ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியன.

மாணிக்கவாசகர் வண்டை விளித்துப் பாடிய பாடல்கள் 'திருக்கோத்தும்பி' என்னுந் தலைப்பில் அமைகின்றன. வண்டைப் பார்த்து "வண்டே! மலர்களில் உள்ள சிறிதளவு தேனுக்காக எவ்வளவு சுற்றுகிறாய்? பாடுகிறாய்? இப்படி மலருக்கு மலர் அலைவதைவிட ஒரே மலரை அந்த ஒப்பற்ற மலரை அடைந்து எல்லையில்லா

இன்பத்தேனைப் பெறுவாயாக! அத்தகைய சிறப்பான ஒப்பற்ற மலர் அம்பலத்தாடும் கூத்தனின் பாத கமலமே! அதனை நீ சென்றடை. அங்கு சென்று பண் பாடு. அப்பாதமலரிலிருந்து பிலிற்றுந் தேன் நினைத்தாலும் கண்டாலும் பேசினாலும் இனிக்கும், எலும்பை உருக்கும்" என்கிறார்.

**"தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே**
**நினைந்தொறும், காண்தொறும், பேசும்தொறும் எப்போதும்**
**அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்**
**குனிப்பு உடையானுக்கே – சென்றூதாய் கோத்தும்பீ"**

என்று பாடிப் பரவசமடைகிறார்.

இவ்வுலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் பெண்மையின் இருப்பிடமாகவும், பரம் பொருளாகிய சிவபெருமானை ஆண்மையின் இருப்பிடமாகவும் கொண்டு, இவ்வுலக உயிர்களனைத்தும் இறைவனோடு இரண்டறக் கலக்க எண்ணும் ஆர்வத்தை அகத்துறை மரபில் நின்று நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடியுள்ளனர். நாயக நாயகி பாவனை பாடல்களை மாணிக்கவாசகரும் பாடியுள்ளார். பெண்மை நிலையில் நின்று இறைவனுடன் கலக்கத் துடிக்கும் துடிப்பை,

**"ஆடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்**
**கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று**
**ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்**
**தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்**
**வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி**
**ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்"**

என்று பாடுகையில் ஒரு பெண்ணின் இயல்பான துடிப்பையும், தவிப்பையும் உணர முடிகிறது.

அம்மானை, தெள்ளேணம், சாழல், பொன்னூசல், பூவல்லி, உந்தி, தோணோக்கம் முதலிய விளையாட்டுக்களின் போது பெண்கள் பாடுகின்ற முறையிற் பல பாடல்களை மாணிக்கவாசகப் பெருமான் அமைத்துள்ளார்.

பெண்கள் கைகொட்டி விளையாடுவது சாழல் என்பதாகும். இரு பெண்கள் விளையாடும்போது ஒருத்தி கேள்வி கேட்பது போலவும் மற்றொருத்தி அதற்கு விடையிறுப்பது போலவும் திருச்சாழல் பாடல்களை அமைத்துள்ளார்.

முதலாவது பெண்: தோழி! எல்லோர்க்கும் தலைவனாக உள்ள ஈசன் கிழிந்த துணிகளை கோவணமாகத் தைத்து உடுத்தியிருப்பதேன்?

இரண்டாம் பெண்: அவன் அணிந்திருப் பவைகளை எளிமையாக எண்ணாதே! நான்கு வேதங்களையே அரை நாணாகவும், நிலைபெற்ற கலைகளில் பொருந்தியிருக்கும் மெய்ப் பொருளையே கோவணமாகவும் அணிந்து உள்ளான் என்பதை அறியவில்லையா?

**"என்னப்பன் எம்பிரான் எல்லோர்க்குந் தான்ஈசன்**
**துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ**
**மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்**
**தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ"**

முதல் பெண்: தில்லையில் ஆடுகின்ற இறைவன் பெண்ணுக்குப் பாதி உடம்பைத் தந்தானே. அவன் பித்தனல்லனே?

இரண்டாம் பெண்: அடி அசட்டுப் பெண்ணே! பெண்ணுக்குத் தன் உடம்பில் பாதியை அவன் தந்திராவிடில் உலகமே அழிந்திருக்குமே, அறியமாட்டாயா?

**"தென்பால் உகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்**
**பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ**
**பெண்பால் உகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர்**
**விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!"**

இறைவன் சிவனுஞ் சக்தியுமாய் நின்று உயிர்களை இயக்காவிடில் உலகில் உள்ள ஆணும் பெண்ணும் இன்பந் துய்க்கமாட்டார்கள். எனவே உலக இயக்கந் தடைப்பட்டு உலகமே அழிந்துவிடும். இதனாலேயே சிவஞானசித்தியார் இல்வாழ்வை 'அவளால் வந்த ஆக்கம்' என்கிறார்.

இங்ஙனம் மிக உயர்ந்த தத்துவக் கருத்துக்களையும், மனிதர்கள் உய்யும் பொருட்டு எளிய இனிய பாடல்களாக வடித்துத் தந்துள்ளார் மாணிக்கவாசகர். இப்பாடல்களைப் பண்ணுடன் பாடுவதும், பாடினார்,பேசினார் வாய்ச்சொல் கேட்பதும், சிவனருள் வேண்டி நிற்றலுஞ் சைவராயினார் தனிப்பெருங் கடமைகளாகும்!

**[நன்றி : சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்]**

* * *

# மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தலை நகரமாகிய மதுரையம்பதிக்குப் பதினைந்துகல் தொலைவில் அமைந்துள்ளது வாதவூர். அவ்வூரில் ஆதி சைவ மரபில் சம்புபாதாசிருதர் என்பார்க்கும் சிவஞானவதி அம்மையார்க்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்தார் வாதவூரர்.

பதினாறு வயதுக்குள் எல்லா நூல்களிலும் வல்லவராக விளங்கினார். இவரது கல்வி மேம்பாட்டினையும் ஆற்றலையும் கண்ட பாண்டிய மன்னன் அரிமர்த்தனன் அவரை அழைத்து முதலமைச்சராக்கித் தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தான். வாதவூரர் மன்னவனுக்கு உறுதுணையாக இருந்து நாட்டை வளப்படுத்தி நல்லாட்சி நடத்தினார். இவர் மனம் மட்டும் மாதொரு பாகன்பால் மட்டில்லாப் பேரன்பு பூண்டொழுகியது.

பாண்டியன் அவைக்களத்திருந்த போது ஒருநாள் சிலர் வந்து சோழ நாட்டுக் கடற்கரையில் குதிரைகள் வந்து கப்பலிலிருந்து இறங்கியுள்ளன என்று தெரிவித்தனர். தன் குதிரைப் படையை வலிமைப்படுத்த எண்ணியிருந்த பாண்டியன் அச்செய்தி கேட்டு நல்லினக் குதிரைகளைப் பார்த்து வாங்கி வருமாறு மிக்க பொன் கொடுத்து வாதவூரரை அனுப்பினான்.

பாண்டியன் கட்டளைப்படி வாதவூரர் படைகள் புடை சூழப் புறப்பட்டு அங்கையங்கண் அம்மையையும் ஆலவாய் அண்ணலையும் வணங்கிக் கீழைக் கடற்கரை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருப்பெருந்துறையில் தங்கினார்.

அங்கே ஒரு பூஞ்சோலையில் சிவாகமங்கள் சொல்லும் ஒலி கேட்டது. வாதவூரர் அங்கே சென்றார். குருந்தமர நிழலில் உள்ளம் கவரும் தோற்றத்துடன் ஞானகுருநாதர் அடியார் குழாம் புடை சூழ வீற்றிருக்கும் காட்சியைக் கண்டார். கண்ணீர் வார மெய்ம்மயிர் பொடிப்ப அவரது திருவடிகளில் விழுந்து வணங்கி 'தேவரீர் அடியேனை இனிப் பிறவா வண்ணங்காத்து ஆட்கொண்டருள வேண்டும்" என்று வேண்டினார். அவரது பக்குவ நிலை கண்ட குருநாதர் அவரைத் திருக்கண்ணால் நோக்கி 'அஞ்சற்க! நின்னை ஆட்கொள்வோம்' என்று திருவாய் மலர்ந்தருளி ஞானோபதேசம் செய்யத் திருவுளங் கொண்டார். முத்திப்பேறளிக்கவல்ல திருவைந்தெழுத்தைச் செவி வழியாகச் சிந்தையுட்புகுமாறு உபதேசித்தருளினார். வாதவூரரின் அகவிருள் அகன்றது. உள்ளொளி பெருகியது. வாதவூரர் சிவானந்த வெள்ளத்தில் திளைந்து நிட்டை கூடி இருந்தார்.

பின்னர் நிட்டை கலைந்த போது அடியார் குழர்த்தோடு இருந்த குருநாதரையும் பிறரையும் காணவில்லை. திகைப்புற்று வருந்தினார். பிரிவாற்றாமையால் வருந்திக் கண்ணீர் வடித்துப் பாமாலை பாடி உருகினார். தன்னை மறந்தார். தலைவன் தாளே தலைப்பட்டுக் கோயில் திருப்பணிகள் செய்யத் தொடங்கினார். அடியார்களை உபசரித்தார். திருப்பெருந் துறையிலே தங்கியிருந்து பல பாடல்களை அருளினார். அவை அனைத்தும் விலை மதிப்புடைய மாணிக்கம் போன்று இருந்தமையால் இவருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயர் இறைவனால் இடப்பட்டது.

இவர் மனம்மாறி, வந்த காரியத்தை மறந்து சிவத்தொண்டில் ஈடுபட்டிருக்கும் செய்தியை ஒற்றர்கள் மூலம் அறிந்த பாண்டியன் மதுரைக்கு வருமாறு ஓலை அனுப்பினான். அரசன் கட்டளையை அறிந்த வாதவூரர் கோயிலுட் சென்று "பெருமானே! கொண்டு வந்த பொருளெல்லாம் சிவபுண்ணியத்தின் பொருட்டுச் செலவு செய்து விட்டேன். குதிரை வாங்கவில்லையே! என்ன செய்வேன்?" என்று விண்ணப்பம் செய்தார். 'அஞ்சற்க! ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று போய்ச் சொல்லுக' என்று அசரீரி கூறியது.

அமைச்சர் மதுரை சென்று 'ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும்' என்று கூறினார். அரசனும் ஆவணி மூலநாளை எதிர்நோக்கி இருந்தான். வாதவூரர் கொண்டு சென்ற பொருளை எல்லாம் ஆலயப் பணியில் செலவழித்துவிட்டார் என்ற செய்தியைப் பாண்டியன் ஒற்றர்கள் மூலம் அறிந்து பொருளைப் பெறும் பொருட்டு வாதவூரரைச் சிறையில் அடைத்தான்.

அடியார் துன்பம் பொறாத ஆலவாய் அண்ணல், நரிகளைப் பரிகளாக்கித் தேவர்களைப் பாகர்களாக்கித் தாம் குதிரை வணிகனைப் போலப் பாய் பரி மேல் இவர்ந்து குதிரைப் படைகளுடன் மதுரை வந்து பாண்டியனிடம் அவற்றையெல்லாம் ஒப்படைத்தார். மன்னவன் வாதவூரரை விடுவித்துப் பிழைபொறுக்க வேண்டினான்.

நள்ளிரவில் குதிரைகள் எல்லாம் நரிகளாகி பழைய குதிரைகளையும் கடித்துக் குதறிவிட்டு ஊளையிட்டு ஓடி மறைந்தன. இச்செய்தி கேட்ட மன்னன் கடுஞ்சினங்கொண்டு வாதவூரரைச் சிறையில் அடைத்தும், வைகை ஆற்று மணலில் நிறுத்தியும் துன்புறுத்தினான். வாதவூரர் சிவபிரானை நினைத்துருகி வேண்டினார். வைகை ஆற்றினில் வெள்ளம் பெருகியது. மதுரை நகரத்தை அழிக்கத்தொடங்கியது. அரசன் ஒவ்வொருவருக்கும் கரை அளந்து கொடுத்து வெள்ளத்தைத் தடுக்குமாறு கட்டளையிட்டான். வந்தி என்னும் மூதாட்டி வைகைக்கரை அடைக்க ஆளில்லாமல் வருந்தி இறைவன் பால் முறையிட்டாள். அவள் வேண்டுகோளுக்கு இரங்கிச் சொக்கநாதர் ஒரு கூலியாளாக வந்து கரை அடைத்துத் தருவதாகக் கூறிப் பிட்டினை முன் கூலியாகப் பெற்றும் கரையை அடைக்காமல் விளையாடிக் கூடையைத் தலையணையாகக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தார். அதனை ஏவலாளர் மூலம் அறிந்த பாண்டியன் அவரைப் பிரம்பால் அடித்தான். அந்த அடி அண்ட சராசரங்கள் அனைத்தின் மேலும் பட்டது. உடனே கூலியாளாக வந்தவர் மறைந்தார். வெள்ளமும் குறைந்தது. மன்னவன் யாவும் இறைவன் செயல் என்று உணர்ந்தான். வாதவூரண்ணல்பால் சென்று அவரது திருவடிகளில் விழுந்து வணங்கிப் பிழை பொறுத்தருள வேண்டினான்.

மணிவாசகர் அவனைத் தேற்றித் துறவு பூண்டு மதுரையில் இருந்து புறப்பட்டுப் பல சிவத்தலங்களையும் தரிசித்துக்கொண்டு சிதம்பரம் சென்று ஒரு சோலையில் தங்கி நிட்டையில் அமர்ந்திருந்தார். பின்னர் பல பாடல்களைப் பாடியருளினார். இலங்கையிலிருந்து வந்த புத்தர்களை வாதில் வென்றார். இலங்கை மன்னன் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தார். இவ்வாறு பல அற்புதங்களைச் செய்தார்.

மணிவாசகனார் தில்லையில் வாழ்ந்துவரும் நாளில் அவரை நாடி ஆனந்தக்கூத்தன் ஓர் அந்தணர் வடிவங்கொண்டு வந்து அவர் பாடிய பாடல்கள் அனைத்தையும் கூறும்படி கேட்டு ஓலையில் எழுதிக் கொண்டார். பின்னும் ' பாவை பாடிய வாயால் பொன்னம்பலவனைப் பாட்டுத் தலைவனாகக் கொண்டு கோவை பாடுக' என்று கேட்டு அதனையும் ஓலையில் எழுதிக் கொண்டார். ஓலையின் இறுதியில் 'மாணிக்கவாசகர் சொற்படி அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது' என்று கைச்சாத்திட்டுப் பொற்சபையின் பஞ்சாக்கரப்படியில் வைத்து மறைந்தருளினார்.

தில்லைவாழந்தணர் அவ்வேட்டினைக் கண்டு பிரித்துப் படித்துப் பார்த்து மிக்க வியப்புடன் மணிவாசகரை அவற்றிற்குப் பொருள் கூறுமாறு வேண்டினர். மணிவாசகர் நடராசப் பெருமான் திருமுன் நின்று இவற்றிற்குப் பொருள் இவ்வானந்தக் கூத்தனே யாவான் என்று கூறிய அளவில் அங்கு தோன்றிய சோதியுள்ளே அனைவரும் காணும்படியாக இரண்டறக் கலந்தருளினார்.

**(திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட திருவாசகம் நூலிலிருந்து பெறப்பட்டது)**

* * *

சிவபூமி திருவாசக அரண்மனை

# நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில்

## பூசை நேரங்கள்

| | | | |
|---|---|---|---|
| காலை 7.30 | - உதயகாலப் பூசை | மாலை 5.30 | - மாலை நேரப் பூசை |
| பகல் 12.00 | - நண்பகல் பூசை | இரவு 7.00 | - அர்த்தசாமப் பூசை |

தினமும் சிவதெட்சணாமூர்த்திக்கு பூசை வழிபாடுகளுடன் நெய் விளக்கேற்றி வழிபாடு செய்தலும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும், பிரதோஷ நாளன்றும் சிவதெட்சணாமூர்த்திக்கு சிறப்பு பூசை வழிபாடுகளும், விசேட அபிஷேகமும் இடம்பெற்றுவருகிறது. மாதாந்தம் பூரணை நாளன்று திருவாசக முற்றோதல் நடைபெறுகிறது.

இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் 108 சிவலிங்கங்களுக்கு தினமும் பூசைகளும், நீர் அபிஷேகமும் இடம்பெறுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நண்பகல் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

சிவதெட்சணாமூர்த்திக்கு சிறப்புப் பூசை, விசேட அபிஷேகங்களை செய்துகொள்ள விரும்பும் அடியார்கள், திருவாசக அரண்மனை முகாமையாளருடன் தொடர்புகொண்டு முன்பதிவுகளை செய்துகொள்ளலாம்.

தொலைபேசி இல - 021 221 4300

நிதியுதவி மற்றும் தேவைகளுக்கு பின்வரும் வங்கிக் கணக்கு இலக்கத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

Account Name : Sivapoomi Trust
Bank : Hatton National Bank
Account No. : 117010009359
E-mail : sivapoomi@gmail.com

# தாகம் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தல்

நாவற்குழி திருவாசக அரண்மனை நுழைவாயிலுக்கு அருகே, அடியார்கள் மற்றும் வழிப்போக்கர்களின் நலன்கருதி சுத்திகரிக்கப்பட்டு குளிரூட்டப்பட்ட நீர் பெற்றுக் கொள்ளும் வகையிலான நீர் விநியோக இயந்திர சாதனமொன்று கடந்த வருடம் (2018) நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜூவலர்ஸ் நிறுவனத்தின் அதிபர் திரு.ஜெயராஜா அவர்கள் தனது அன்பளிப்பாக மேற்படி இயந்திர சாதனத்தை அமைத்து உதவியிருக்கிறார். இவரது இந்த தர்ம கைங்கரியத்தை பலரும் பாராட்டிப் போற்றி வருகிறார்கள்.

# சிவபூமி அறக்கட்டளையின்
# பன்முகப் பணிகள்

- ☆ கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை
- ☆ கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை
- ☆ திருகோணமலை சிவபூமி கோணேஸ்வரா மனவிருத்திப் பாடசாலை
- ☆ சிவபூமி முதியோர் இல்லம்
- ☆ கீரிமலை சிவபூமி யாத்திரிகர் விடுதி
- ☆ திருகோணமலை சிவபூமி யாத்திரிகர் விடுதி
- ☆ கீரிமலை சிவபூமி கலைக் களஞ்சியம்
- ☆ குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமம்
- ☆ கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை
- ☆ நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை
- ☆ நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில்
- ☆ சுழிபுரம், நெல்லியான் சிவபூமி விவசாயப் பண்ணை
- ☆ பளை, இயக்கச்சி சிவபூமி விவசாயப் பண்ணை
- ☆ பளை, கோவில்வயல் சிவபூமி பஞ்சாமிர்தத் தோட்டம்
- ☆ சிவபூமி நாவற்குழி செவ்விளநீர் தோட்டம்
- ☆ பளை, இயக்கச்சி சிவபூமி நாய்கள் சரணாலயம்
- ☆ ஆனைக்கோட்டை 'அபயம்' மருத்துவ சேவை நிலையம்
- ☆ "சிவபூமி" - மாதாந்த செய்திப் பத்திரிகை
- ☆ நாவற்குழி சிவபூமி அரும்பொருட் காட்சியகம்
  (விரைவில் இயங்கவிருக்கிறது)

# சிவபூமி திருவாசக அரண்மனை



நுழைவாயில்



சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்



பிரதமகுரு சிவஸ்ரீ ம.நிருபன் குருக்கள்



கருங்கல் இரதம்



நிர்மாணிக்கப்பட்டுவரும் மணிக்கோபுரம்



அகத்திய முனிவர் கோயில்



அலுவலகம் / பூசைப்பொருள் விற்பனை நிலையம்